# உதயன்

சுடர் : 36 கதிர் : 262 | செவ்வாய்க்கிழமை | ஆவணி 1ஆம் நாள் 17 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## 1,157 கிலோ மஞ்சளுடன் பூநகரியில் இருவர் கைது

கிளிநொச்சி, ஓக. 17

இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட 1,157 கிலோகிராம் மஞ்சளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பூநகரி பொலிஸார் தெரிவித்தனர். பூநகரி மன்னித்தலை பகுதியில் வைத்து அவர் 19

### கொவிட் - 19

# சாவிலும் தொற்றிலும் இலங்கையே முதலிடம்

## ராஜித சேனாரத்ன அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஒகஸ்ட் 17

உலக தகவல்களுக்கு அமைய கொரோனா வைரஸ் பரவலிலும், உயிரிழப்பிலும் இரண்டாவது நாடாக இலங்கையே உள்ளது. தொற்றாளர்கள் உயிரிழக்கும் சதவீதத்தைக் குறைத்து அல்லது அதிகரித்துப் பார்த்தால் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளது. உலகில் மிக வேகமாகக் கொரோனா உயிரிழப்புக்கள் சம்பவிக்கும் நாடாக இலங்கையே உள்ளது. 19

## முழங்கால் மோதுண்டு காயப்பட்டவர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 17

விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்பத்தலைவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். 14

## கொடிகாமம் சந்தையில் 13 பேருக்கு தொற்றுறுதி

கொடிகாமம், ஓக. 17

கொடிகாமம் சந்தையில் நேற்று திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனை 17

## ஒரே நாளில் 167 பேர் சாவு! 3,414 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 17

இலங்கையில் மேலும் 167 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். இதுவே 19

## யாழில் நேற்றும் நால்வர் கொரோனாவால் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை மேலும் நால்வர் கொவிட்19 நோயால் உயிரிழந்துள்ளனர். யாழ். போதனா மருத்துவ 19

## மக்கள் நடமாட்டத்தை 90 வீதம் குறையுங்கள்

*மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் அவசர கோரிக்கை*

கொழும்பு, ஓக. 17

கொவிட்19 நோய்த்தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த சமூகத்தில் பொதுமக்கள் நடமாட்டத்தை 80 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் 19

## நாடு நெருக்கடிக்குள்ளானாலும் எவரையும் குற்றஞ்சாட்ட முடியாது

*அரசு என்ற வகையில் நடவடிக்கை எடுப்போம் கூறுகின்றார் இராஜாங்க அமைச்சர் திஸாநாயக்க*

கொழும்பு, ஓக. 17

சமூக பொருளாதார, சுகாதார நெருக்கடி நிலைமைகளை எமது நாடு எதிர்கொண்டுள்ளது. இதற்கு எவரையும் குற்றஞ்சுமத்த முடியாது. அரசு என்ற வகையில் இந்தப் 19

## அமைச்சரவை திடீர் மாற்றம் பவித்திரா பதவி பறிபோனது!

*புதிய சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய*

கொழும்பு, ஓக. 17

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தோல்வி கண்டுவிட்டாரென கடும் விமர்சனங்களை எதிர்கொண்ட சுகாதார அமைச்சர் பவித்திராதேவி வன்னியாராச்சியிடமிருந்து, குறித்த அமைச்சு பறிக்கப்பட்டுள்ளது. 19

மக்களின் எதிர்ப்பால்

## கைவிடப்பட்டது காணி சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணம், பருத்தித்துறையின் கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள படையினர் முகாம் அமைக்க நேற்று மேற்கொள்ளப்பட்ட காணி சுவீகரிப்பு நடவடிக்கை, மக்கள் பிரதிநிதிகளின் கடும் எதிர்ப்பால் 14

## விமானத்தில் தொற்றிய மூவர் வானில் இருந்து வீழ்ந்து சாவு!

*காபூல் வான் தளத்தில் அவலம்!*

காபூல், ஓக. 17

ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறும் நோக்கில் விமானசக்கரங்களில்தொங்கியபடி பயணித்த மூவர் கீழே வீழ்ந்து 17



## "எல்லாம் நன்மைக்கே"



*மன்னர் கதைகூறி விடைபெற்றார் பவித்திரா*

கொழும்பு, ஓக. 17

"சுகாதார அமைச்சு பதவியில் திடீர் மாற்றம் வருமென நான் நினைக்கவில்லை. வாழ்க்கையில் எது நடந்தாலும் அதனை மகிழ்ச்சியுடனேயே ஏற்கவேண்டும். எல்லாமே நன்மைக்குத்தான் என எண்ணி மனதை தேற்றிக்கொள்வோம்." என்று போக்குவ 19

## திணைக்களங்கள் முடக்கப்படும்

*சிவாஜி எச்சரிக்கை*


யாழ்ப்பாணம், ஓக. 17

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அனுமதி எடுக்காமல் இராணுவத்தினருக்கு காணி அளவிட முற்பட்டால் பிர 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 லட்சம் பேர் தடுப்பூசி பெறவில்லை

## அதிகளவில் உயிரிழப்போரும் இவர்கள்தான் இராஜாங்க அமைச்சர் ஜயசுமன தெரிவிப்பு




**கொழும்பு, ஓக. 17**

**நாட்டிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் இதுவரை எந்தவித தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

அதேவேளை, தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளாதவர்களே அதிகளவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நாளாந்தம் கொரோனாவால் உயிரிழப்போரில் அதிகளவானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதனால் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றுவதற்கு விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார், கிராம அலுவலர் உள்ளிட்ட தரப்பினரின் ஒத்துழைப்புடன் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுள்ளது. அதற்கு அமைய, வீடுகளுக்குச் சென்று தடுப்பூசிகளை ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை இராணுவத்தினரால் கொழும்பு நகரில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் விரைவில் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு-இ)

## உயர்தர வகுப்பு மாணவன் கொரோனாவால் சாவு!

கொழும்பு, ஓக. 17

கொழும்பிலுள்ள பிரபல கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் பயிலும் 18 வயதான மாணவரொருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி அந்த மாணவன், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட மாணவன், 14 ஆம் திகதி கொழும்பு தெற்கு போதனா மருத்துவமனையில் (களுபோவில) சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்துள்ளார்.

மாணவன் ஆபத்தான நிலையில் இருந்தார் என்றும்- அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டது என்றும்- மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (கு-இ)

## ஊடகப் பேச்சாளர் மீண்டும் தனிமையில்

கொழும்பு, ஓக. 17

சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் மீண்டும் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்குள்ளாகிய நபரின் நெருங்கிய தொடர்பாளராக இருந்ததால் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் படுவந்துடாவா தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான நபருடன் தொடர்பைப் பேணிய முதல் நிலை உறுப்பினர் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் பாதிக்கப்படலாம் அல்லது வைரஸ் பரவலாம் என்றும் குறிப்பிட்டார். தனிமைப்படுத்தலுக்குப் பின்னர், பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், அறிகுறிகள் இல்லை என்றாலும், அவர் வைரஸ் கடத்தியாக இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டினார். இதற்கு முன்னர், கடந்த மாதம் தனது அலுவலக ஊழியர்களில் பலருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டதன் காரணமாக ஹேரத் சுய தனிமைப்படுத்தலில் இருந்தார். (கு-இ)

# யாழ்.பல்கலை ஊழியர்கள் பணிகளுக்கு திரும்பலாம்

## ஊழியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின், துணைவேந்தர் வழங்கியுள்ள சில உறுதிமொழிகளின் பிரகாரம், ஊழியர்கள் பணிக்குத் திரும்பலாம் என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 9 ஆம் திகதி துணைவேந்தரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக, திங்கட்கிழமை (நேற்று) தொடக்கம் பணிக்கு திரும்பலாம் என்று பரிந்துரை செய்கிறோம்.

பணிக்குத் திரும்பும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவும்.

ஒவ்வொரு பணியிடங்களிலும் வாரத்தில் மூன்று தினங்களென்ற சுழற்சி முறையை கட்டாயமாகக் கடைப்பிடித்தல், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் துறைத்தலைவருக்கு, உரிய முறையில் அறிவித்து வீட்டிலிருந்து பணியாற்றல் வேண்டும், பணியிடங்களில் கொரோனா அபாயம் உள்ளவர்கள், அல்லது தங்களுக்கு கொரோனா தொற்றாளர் ஒருவருடன் நேரடி தொடர்பு உள்ளது என கருதுபவர்கள் அல்லது தங்கள் சூழலில் பிரதேசத்தில் கொரோனா அபாயம் உள்ளவர்கள் துறைத்தலைவருக்கு, உரிய முறையில் அறிவித்து வீட்டிலிருந்து பணியாற்றல் வேண்டும், உங்களது பணியிடத்தில் பணிபுரியும் ஒருவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளாரெனின், பல்கலைக்கழக கொவிட் தடுப்பு செயலணித்தலைவரின் பரிந்துரை இன்றி உங்கள் துறைக்குள் பிரவேசிக்க வேண்டாம்.

பணிக்கு வருகை தந்தநிலையில் தங்களுக்கு கொரோனா தொற்றாளர் ஒருவருடன் நேரடி தொடர்பு உள்ளது என தெரிவுடன் உடனடியாக பாதுகாப்பான முறையில் துறைத்தலைவருக்கு, உரிய முறையில் அறிவித்து உடனடியாக பணியிடத்தைவிட்டு வெளியேறி, வீடு திரும்பி உங்களை சுயதனிமைப்படுத்திக் கொள்வதோடு உரிய சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றவும். ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் கொரோனா கண்டறிவதற்கான சோதனையை (பி.சி.ஆர்./ அன்டிஜென்) மேற்கொண்டிருப்பின் தயவுசெய்து அந்தச்சோதனையின் முடிவு வரும் வரை உங்களை சுயதனிமைப்படுத்திக் கொள்வதோடு முடிவு கிடைத்தபின்னர் சுகாதாரத் துறையினரின் (பொதுச் சுகாதார பரிசோதகரின்) வழிகாட்டல்களை பின்பற்றவும். துறைத்தலைவர் மறுக்கும் பட்சத்தில் அல்லது அறிவிக்க முடியாத சந்தர்ப்பத்தில் துணைவேந்தருக்கு நேரடியாக எழுத்து மூலமாக அறிவிப்பதோடு ஊழியர் சங்கத்திற்கும் தெரியப்படுத்தவும்.

நீங்கள் சுழற்சி முறையில் பணிக்கு மார்த்தப்பட்ட நாள்களில் கடமைக்கு சமுகளிக்க முடியாவிட்டால் அந்தத் தினங்கள் தங்களின் சொந்த விடுப்பாகவே கருதப்படும். சுழற்சி முறையில் பணிக்கு வராமல் வீட்டில் தங்கியிருக்கும் நாள்களில் நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்.

மேலும் பல்கலைக்கழக பணியாளர்களுக்கான பிரத்தியேக கொவிட் தடுப்பு சிகிச்சை மையமொன்றை உருவாக்க துணைவேந்தரிடம் நாம் முன்வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஊழியர் சங்க அறிவுறுத்தலின் பிரகாரம் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக பணியிடங்களுக்குச் செல்லாது வீட்டில் தங்கியிருந்த காலப்பகுதி (பராமரிப்புத் துறை பணியாளர்கள் 09.08.2021 முதலும் ஏனைய அனைத்துப் பணியாளர்கள் 12.08.2021 முதல் 15.08.2021 வரை) ஊழியர்களின் சொந்த விடுமுறையில் கழிக்கப்படமாட்டாது- என்றுள்ளது. (கு)

## முதியோர் இல்லத்தில் மூவர் சாவு!

கொழும்பு, ஓக. 17

கண்டி முதியோர் இல்லமொன்றில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த முதியோர் இல்லத்தில் 63 பேர் வசித்து வருகின்றனர். அவர்களில் இதுவரையில் 46 முதியோர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் கண்டி மாநகர சபை சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (கு-இ)

### சந்தேகநபர்களை

# சிறைக்கு அனுப்புவதை இயன்றளவு குறைக்கவும்

## பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 17

சிறப்புத் தேவைகளைத் தவிர்த்து சந்தேக நபர்களை சிறைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம், பொலிஸ் மா அதிபர் சிடி விக்கிரமரத்னவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயைத் தொடர்ந்து சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைப்பதற்கான பரிந்துரைகளின் கீழ் சிறைசாலைகள் ஆணையாளர் நாயகம், சட்ட மா அதிபரிடம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தற்போது சுமார் 21 ஆயிரம் கைதிகள் சிறைகளில் உள்ளனர். கொவிட்19 பரவுவதைக் குறைக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் விடுத்த கோரிக்கையை சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபரிடம் தெரிவித்தார் என்று சிறைசாலை திணைக்களப் பேச்சாளர் கூறினார்.

அதன்படி, சிறைச்சாலைகள் நெரிசல் மற்றும் கொவிட்19 பரவுவதைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான அறிகுறிகளா? மருத்துவமனையை நாடுங்கள்

## குழந்தைகள் மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

**பிள்ளைகள் சோர்வடைதல், அவர்களின் சிறுநீர் அளவு குறைதல், நீரா காரங்களை உண்ணாதிருத்தல், தொடர்ச்சியாக வாந்தி எடுத்தல், மூச்சு விட கஷ்டப்படுதல் போன்ற பிரச்சினைகளை பிள்ளைகளில் கண்டால் உடன டியாக மருத்துவமனையை நாடவேண்டும். தாய்க்கு தன்னுடைய பிள்ளை யின் செயற்பாட்டில் வித்தியாசம் தெரியுமாக இருந்தால் மருத்துவமனைக்கு அழைத்து வருவது சிறப்பானது. இவ்வாறு குழந்தைகள் மருத்துவ நிபுணர் கே.அருள்மொழி தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடை பெற்ற கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வயதுக்கு மேல் முகக்கவ சம் அணியலாம் இரண்டு வய துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு முகக்கவசம் அணிவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

குழந்தைகளையும் கொரோனா தாக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உலகளாவிய ரீதியில் கொரோனா கூடிக் கொண்டே செல்கின்றது.

குறிப்பாக பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் இலங்கையிலும் யாழ்ப் பாணத்திலும் குழந்தைகளுக்குத் கொரோனா தொற்றும் வீதம் அதி கரித்திருக்கின்றது.

மூவகைத் தொற்று குழந்தை களுக்கு தொற்றுவதை மூன்று வகையாகக் கூற முடியும்.

முதலாவது சாதாரணமாக தாக்கப் படுதல் அதன் அறிகுறிகள் தெரி யாது அல்லது அறிகுறிகள் மிகக் குறைந்த அளவில் காணப்படும். இவ்வாறான கொரோனாவே அதி களவில் குழந்தைகளுக்கு ஏற்படு கிறது. இரண்டாவது தீவிரமாக குழந்தைகளை தாக்குதல். இது பெரியளவில் தென்னிலங்கையில் பேசப்படுகிறது. ஆனாலும் இங்கு பெரியளவில் இனங்காணப்பட வில்லை. மூன்றாவது குழந்தைக ளின் உடல் உறுப்புகளை தாக்கு வதாகும்.

**பிற இடங்களுக்கு குழந்தைகளை கூட்டி செல்ல வேண்டாம்**

கை மருத்துவங்களை தவிர்த்தால் நல்லது. குழந்தைகளைத் தேவை யற்ற இடங்களுக்கு கூட்டிச் செல் வதை தவிர்க்க வேண்டும்.

கைகளை கழுவுவதற்கு குழந்தை களுக்கு உதவி செய்ய வேண்டும். இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந் தைகளுக்கு முகக்கவசம் அணி வ தால் எந்தப்பிரச்சினையும் இல்லை. உணவருந்தும்போதும் நித்திரை கொள்ளும்போதும் முகக்கவ சத்தை அணியத் தேவையில்லை.

**நாள்பட்ட நோயாளிகள்**

நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் வீட்டில் இருப்பார்க ளெனில், குழந்தைகள் வீட்டில் முகக்கவசத்தை போடுவது நல் லது. அவ்வாறில்லாவிடில் தேவை யில்லை. சிலர் குழந்தைகளுக்கு முகக் கண்ணாடி (பேஸ் சீல்ட்) அணி விக்கிறார்கள். முகக்கண்ணாடி (பேஸ் சீல்ட்) முகக்கவசத்துக்கு மாற்றாக அமையாது. அதே வேளை முகக்கவசத்துக்கு மேலதி கமாக அதனை அணிய முடியும்.

**18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசிகள்**

மிகவிரைவில் 18 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு தடுப்பூசி போடப்ப டவுள்ளது. சில நாடுகளில் 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுகின்றன. சீனா போன்ற சில நாடுகளில் 3 வயதுக்கு மேற்பட்ட குழந்தை களுக்கு தடுப்பூசிபோடும் செயற் பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் இலங்கையை பொறுத்த வரை குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுகின்ற எந்த முடிவும் இது வரை எடுக்கப்படவில்லை - என் றார். (கு-26)



## வவுனியா மருத்துவமனைக்கு ஒட்சிசன் இயந்திரம் கையளிப்பு

வவுனியா, ஓக. 17

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு 15 லட்சம் ரூபா பெறுமதியான ஒட்சிசன் இயந்திரம் வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலாளருமான சமன் பந்துலசேன மற்றும் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண ஆகி யோரின் கோரிக்கைக்கு அமைவாக ராஜரட்டை பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஞானதிலக தேரரின் ஏற்பாட்டில் பிரான்சில் உள்ள சர்வதேச பௌத்த சமய அமைப்பைச் சேர்ந்த வர உபகார சந்திரதேர ரால் இந்த இயந்திரம் வழங்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலையில் கொவிட் தொற்றாளர் களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் ஒட்சிசனுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் நோயாளர்களுக்கு தேவையான ஒட்சிச னைப் பெற்றுக் கொடுப்பதற்காக சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான உயர் ஓட்ட நாசி ஒட்சிசன் கருவி வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், வவுனியா மூத்த பொலிஸ் அத்தி யட்சகர் திஸாலால் டிசில்வா, வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடு மற்றும் மருத்துவ அதிகாரி மதுரகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண் டனர். (ஐ-18)

## தென்மராட்சிப் பகுதியில் தொற்று அதிகரிக்கிறது!

சாவகச்சேரி, ஓக. 17

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இரு நாள்க ளில் 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா அறிகுறிகளு டன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டோருக்கு நேற்றுமுன்தினம் மேற் கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 7 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகத்தால் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டி ஜென் பரிசோதனையில் 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் கொடிகாமம் சந்தை வியாபாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 13 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ-9)

## எரிகாயங்களுக்கு இலக்கான குடும்பத்தலைவர் சிகிச்சையில்

சாவகச்சேரி, ஓக. 17

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் குடும்பத் தலைவர் ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கும் நோக்கில் வள வில் காணப்பட்ட குப்பைகளை எரிக்க மண்ணெண்ணெய் ஊற்றியபோது அது ஆடையில் பட்டு உடம்பில் தீப்பற்றிக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## எந்த நிகழ்வுக்கும் அனுமதி இல்லை!

**சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் தெரிவிப்பு**

சாவகச்சேரி, ஓக. 17

தென்மராட்சி பிரதேசத்தில் எந்தவொரு நிகழ்வுக்கும் அனுமதி வழங்கப்படமாட் டாது என்று சாவகச்சேரி சுகாதார மருத் துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித் துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந் ததின விழா மற்றும் கோவில்களின் உற் சவங்கள் போன்றவற்றை வீடுகள், மண்ட பங்கள் மற்றும் கோயில்களில் நடத்துவ தற்கு அனுமதி கோரி பலர் விண்ணப்பித்து வருகின்றனர். இந்த நிலையில் கொரோ னாவின் பரம்பலைக் கட்டுப்படுத்த எந்த வொரு நிகழ்வையும் நடத்த வேண்டாம் என்று அரசு அறிவித்துள்ளது.

எனவே நிகழ்வுகளை ஏற்பாடு செய்தோர் பிறிதொரு தினத்துக்கு பிற்போடவும். இந்த அறிவிப்பை மீறி நிகழ்வுகள் நடத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் கொரோனா தனி மைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பங்குபற்றும் அனைவரும் தனிமைப்படுத்தப்படுவது டன் நிகழ்வினை நடத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர். (ஐ-9)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஓக. 17

திடீரென வீதியின் குறுக்கே சென்ற டிப்பருடன் மோட்டார் சைக்கிள் மோதியதில், அதில் பயணித்த குடும்பத் தலைவர் காயமடைந் தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தென்மராட்சி தெற்கு ஏ- 32 வீதி தனன்கிளப்பு பகுதியில் இடம்பெற் றது.

விபத்தில் துணுக்காயைச் சேர்ந்த 49 வயதுடைய குடும்பத் தலை வரே காயமடைந்த நிலையில் சாவ கச்சேரி ஆதார மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச் சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

துணுக்காயிலிருந்து யாழ்ப்பாணத் துக்கு மோட்டார் சைக்கிளில், பய ணித்த வேளையில் முன்னால் சென்று கொண்டிருந்த டிப்பர் வாக னம் திடீரென வீதியின் குறுக்கே சென்றதால், மோட்டார் சைக்கிள் டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளா னது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9,113,159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளரை வீட்டில் வைத்து பராமரிக்கும் திட்டம் ஆரம்பம்!

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 17

**வடக்கு மாகாணத்திலும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டம் இன்று (நேற்று) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களை வீட்டில் பராமரிக்கும் திட்டமானது இலங்கையின் மேல் மாகாணத்தில் மட்டும் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இந்தத் திட்டமானது தற்போது ஏனைய மாகாணங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நோயாளியை அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தொடர்பு கொண்டு அவர் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படுவதற்கு தகுதியானவரா என்பதனை முதலில் பரிசோதிப்பார். அப்போது கீழ்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

நோயாளி இரண்டு தொடக்கம் 65 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். கொரோனாத் தொற்று நோய் அறிகுறி எதுவும் இல்லாதவராக இருத்தல் வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்களாயின் அவர்கள் 24 வாரங்களுக்குட்பட்ட கர்ப்பவதிகளாக இருத்தல் வேண்டும்.

வேறு நோய் நிலைமை உள்ளவர்களுக்கு அந்த நோய் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். நோயாளியின் வீடானது அவரை ஏனையவர்களிடமிருந்து நோய் பரவாது தனிமைப்படுத்தி வைத்திருக்கக்கூடிய வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.

நாளாந்தம் தொலைபேசி மூலம் அவரது நோய் நிலைமையைக் கண்காணிப்பதற்குரிய தொலைபேசி வசதிகள் நோயாளியின் வீட்டில் இருத்தல் வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரியால் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டால், அவரது விவரங்கள் மத்திய சுகாதார அமைச்சால் இதற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கணினி மென்பொருளில் தரவேற்றம் செய்யப்படும்.

அதன் பின்னர் மத்திய சுகாதார அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட அழைப்பு நிலையத்தில் இருந்து வைத்தியர்கள் தினமும் நோயாளியைத் தொடர்பு கொண்டு நோயாளியின் உடல் நிலைமையைக் கண்காணிப்பர். தேவை ஏற்படின் நோயாளியும் அவ் வைத்தியரைத் தொடர்பு கொள்ளமுடியும்.

நோயாளியின் உடல் நிலைமை மோசமடையும் சந்தர்ப்பத்தில் நோயாளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட வேண்டியிருப்பின் அந்தத் தகவல் உடனடியாக பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படுவதைத் தொடர்ந்து அவர் அந்த நோயாளியை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்.

பி.சி.ஆர். செய்யப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு நோயாளியும் இவ்வாறு 10 நாள்கள் வீட்டுப் பராமரிப்பில் வைத்திருக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவர் என்றுள்ளது. (எ-26)





## அனுமதியின்றி மணல் ஏற்றிய ஐவர் கைது

கிளிநொச்சியில் இருவேறு இடங்களில் அனுமதியின்றி மணல் ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்கள் மற்றும் உழவியந்திரம் என்பனவற்றுடன் அவற்றின் சாரதிகள் நேற்று கைதுசெய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லாடர், புளியம்பொக்கணை, கல்மடு ஆகிய இடங்களில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-113)

# அத்துமீறி காணிபிடிப்பவர்களால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல்!

## சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், ஓக. 17

மன்னார் முசலி பிரதேசத்தில் அடாத்தாக காணி பிடிப்பவர்கள் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மருதமடு கிராமத்துக்குச் சொந்தமான 14 ஏக்கர் அரச காணிகளை அடாத்தாக பிடிக்கும் தனிநபர்கள், காணி விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது பிரதேச செயலர்களுக்கோ தெரிவித்தால் அடித்துத் துவம்சம் செய்வோம் என்று மக்களுக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர்.

மன்னார் மருதமடு கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் வசித்து வந்த நிலையில் போருக்கு பின்னர் இடம்பெயர்ந்து தற்போது இந்தியாவில் வசித்து வருகின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு முசலி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் அந்தக் காணிகளை அபகரிப்பதற்கு முயற்சி செய்திருந்தார். அதில் நான் நேரடியாக தலையிட்டு தடுத்து நிறுத்தி வைத்திருந்தேன்

தற்பொழுது அதேநபர் அந்தக் காணியை வேறு ஒருவருக்கு விற்பனை செய்ததால் காணிகளை பெற்ற நபர் அதில் அபிவிருத்திகள் செய்து கொண்டிருப்பதாக பொதுமக்கள் எழுத்து மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் முறைப்பாடு செய்தார்கள். அதன் அடிப்படையில் நேற்றுக் காலை பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவு உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் மற்றும் பொதுமக்களுடன் நானும் நேரில் சென்று பார்வையிட்டேன்.

கிட்டத்தட்ட 14 ஏக்கர் காணியை குறித்து ஒரு தனிநபர் பிடிப்பது தெரியவந்துள்ளது. எமது கோரிக்கைக்கு அமைவாக குறித்த அபிவிருத்தி பணிகளை தடை செய்வதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்

குறித்த 14 ஏக்கர் காணிகளை அரச காணிகளாக மாற்றி பொதுமக்களுக்கான மயானத்துக்கும், மிகுதி காணிகளை காணிகள் அற்ற புதிய குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுங்கள் என்ற கோரிக்கையை விடுத்துள்ளேன். இதற்கு பிரதேச செயலகத்தினர் வாய் மூலம் உறுதி அளித்துள்ளார்கள்- என்றார். (ஜ-213)

## போதையில் தாக்குதல்; மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஓக. 17

மதுபோதையில் நின்ற கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மிருசுவில் பழைய வாய்க்கால் சந்தியில் இடம்பெற்றது.

மதுபோதையில் நின்ற ஆறுபேரைக் கொண்ட கும்பல் ஏ-9 வீதியால் பயணித்தோரை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியைச் சேர்ந்த ஒருவரும் மிருசுவில் பழைய வாய்க்காலைச் சேர்ந்த இருவரும், காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ

## பலாங்கொட முடக்கம்

பலாங்கொடை நகரில் உள்ள மருந்தகங்கள் மற்றும் ரயர் கடைகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் நாளை தொடக்கம் 22ஆம் திகதிவரை மூடப்படுகின்றது என்று பலாங்கொடை வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றபோதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் நகரசபை உறுப்பினர் லால் கலப்பதிதி தெரிவித்தார்.

வர்த்தக நிலையங்களை மூடுவதன் ஊடாக நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த முடியுமெனவும், இதனூடாக கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் நம்பிக்கை வெளியிட்டார். (எ-இ)

## கசிப்பு விற்பனை: 5 பெண்கள் கைது

கிளிநொச்சி, ஓக. 17

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 5 பெண்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

தருமபுரம் பகுதியில் இரு பெண்களும், இராமநாதபுரம் பகுதியில் இரு பெண்களும் மற்றும் உழவனூர் பகுதியில் ஒரு பெண்ணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் ஐவரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஜ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் உறங்கும் வேளையில் ஊரடங்கு உத்தரவு எதற்கு?

## அரசின் முடிவு மடத்தனமானது என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 17

**மக்கள் உறங்கும்வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதில் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இந்த அரசு மடத்தனமான முடிவுகளையே எடுக்கின்றது. தனக்கு போதிய அனுபவம் இல்லாவிட்டால் முடியுமான ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஜனாதிபதி பதவி விலக வேண்டும். இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடக வியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு;

மிகவும் மோசமானதொரு கால கட்டத்திலேயே தற்போது இருக்கின்றோம். கொரோனாவை கட்டுப்படுத்துவதில் தோல்வி கண்டுள்ள அரசு, ஊடகங்கள் வாயிலாக வேறு விதத்தில் பரப்புரை முன்னெடுக்கின்றது. உண்மை அதுவல்ல. மரண வீதத்தில் நாடு முன்னிலை வகிக்கின்றது. மக்கள் வீடுகளுக்குள்ளேயே செத்து மடியும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் உச்சம் தொட்டுள்ளது.

இந்தநிலையில் போலியான தகவல்களையும், தரவுகளையுமே அரசு வெளியிடுகின்றது. அவ்வாறு மோசடி செய்து மக்களை தவறாக வழிநடத்தாமல் உண்மை நிலவரத்தை தெளிவுப்படுத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.

அரச மருத்து அதிகாரி சங்கங்கள், பொதுச் சுகாதார அதிகாரி சங்கம் மற்றும் சுகாதார துறைசார்ந்தோர் நாட்டை முடக்குமாறு வலியுறுத்துகின்றனர். இதனைச் செய்யாமல், துறைசார் நிபுணர்களின் பரிந்துரைகளை ஏற்காமல் தனது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே போலி தகவல்களை அரசு இவ்வாறு வெளியிட்டுவருகின்றது.

தடுப்பூசிகளை துரிதமாக பெறுமாறு அரசை நாம் வலியுறுத்துகையில் பாணியின் பின்னால் ஓடினர். பானையை ஆற்றில் போட்டு கூத்து காட்டினர். அரசு இவ்வாறு இழைத்த தவறுகளால் மக்கள் இன்று செத்து மடிகின்றனர். முதலாவது அலையின்போது நாட்டை மூடுமாறு வலியுறுத்தினோம். வேட்புமனு தாக்கல் வரை அரசு காத்திருந்தது. 2ஆவது அலை ஏற்பட்டபோது 20 ஐ நிறைவேற்றும்வரை மௌனம் காத்தது. தற்போது என்ன செய்யப்போகின்றது எனத் தெரியவில்லை. இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தூங்கும்வேலையில் ஊரடங்கு பிறப்பிப்பதில் என்ன பயன்? இவ்வாறு ஊரடங்கு பிறப்பிப்பதும் ஒன்று, பிறப்பிக்காமல் இருப்பதும் ஒன்றுதான்.

எனவே, நாட்டை முடக்குமாறு அரசை வலியுறுத்துவோம். நமது உயிரை நாமே பாதுகாத்துக்கொள்வோம். ஜனாதிபதிபோதிய அனுபவம் இல்லாவிட்டால், முடியுமான ஒருவருக்கு பொறுப்பை வழங்கிவிட்டு, பதவி விலக வேண்டும்.-என்றார்.

(எ-44)

# நாடாளுமன்ற அமர்வு இவ்வாரம் ஒருநாளே

கொழும்பு, ஓக.17

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக இந்த வாரம் ஒரு நாள் மட்டுமே நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதன்படி இன்று மு.ப. 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடுகிறது. கடந்த சில நாள்களில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற பாதுகாப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற பணியாளர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானதை அடுத்து இந்த வார நாடாளுமன்ற கூட்டங்களை நிறுத்தி வைக்க எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

(எ-இ)

# வீடுகளுக்கு திரும்பிய 2,325 பேர்

கொழும்பு, ஓக. 17

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 325 பேர் பூரண குணமடைந்து நேற்றுத் திங்கட்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 12 ஆயிரத்து 57 ஆக அதிகரித்துள்ளது.

(எ-இ)



# கொழும்புக்கு கடத்தப்பட்ட 1,000 கிலோ மஞ்சள் மீட்பு

கிளிநொச்சி, ஓக. 17

பூநகரி, கௌதாரிமுனையில் இருந்து கொழும்புக்கு கூலர் வாகனத்தில் கடத்தப்பட்ட ஆயிரத்து 200 கிலோ மஞ்சள், பூநகரி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்த வாகனம் அத்தியாவசிய சேவைகள் என்ற பாதாகையுடன் பயணித்தது என்றும் - அத்தியாவசிய பொருள்களுடன் மஞ்சளும் கலந்து கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த மஞ்சள் கடல் மார்க்கமாக கௌதாரிமுனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த வாகனத்தின் சாரதி மற்றும் நடத்துநர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

43 மற்றும் 23 வயதான இவர்கள் நீர்கொழும்பு மற்றும் மன்னார் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-113)

## ஆசிரியர், அதிபர் சம்பளப் பிரச்சினை

# உபகுழுவின் அறிக்கை திங்கள் அமைச்சரவைக்கு!

கொழும்பு, ஓக.17

"ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக அமைச்சரவை உபகுழுவினர் தயாரிக்கும் அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சம்பளப் பிரச்சினை குறித்து நிதியமைச்சருடன் இவ்வாரம் பேச்சில் ஈடுப்படவுள்ளோம்."

இவ்வாறு அமைச்சரவை உபகுழு உறுப்பினரும், சுற்றாடற்றுறை அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போதைய நிலையில் நாட்டு மக்கள் அனைவரும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆசிரியர், அதிபர் சேவையில் கடந்த 24 வருட காலமாக சம்பளம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் இவர்கள் வேதன அதிகரிப்பு தொடர்பில் கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள்.

கோரிக்கை நியாயமானதாக இருந்தாலும், அதற்கான தருணம் இதுவல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

வேதன பிரச்சினையை முன்வைத்து ஆசிரியர்கள் கடந்த இரண்டு மாத காலமாக நிகழ்நிலை முறைமை ஊடான கற்பித்தலில் இருந்து விலகி போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகிறார்கள்.

இதனால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைக்கு தீர்வு காண அமைச்சு மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்தன.

பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கு தொழிற்சங்கத்தினர் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுப்பட்டார்கள். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் பொருட்டு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது - என்றார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கொவிட்டின் மற்றொரு திரிபான


# எபிசிலோன் வைரஸால் நிமிடத்துக்கு ஒரு சாவு!



**கொழும்பு, ஓக. 17**

**கொவிட் வைரஸின் திரிபான எபிசிலோன் என பெயரிடப்பட்டுள்ள திரிபு நாட்டுக்குள் பரவினால், ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் இறப்பார் என அரச மருத்துவ அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இதனடிப்படையில் ஒரு மணி நேரத்தில் 30 பேர் இறக்கக் கூடும் எனவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த புதிய வைரஸை எதிர்கொள்ள மக்களின் உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தடுப்பூசி மூலம் வழங்கப்படும் நோய் எதிர்ப்பு சக்தியும் போதாது எனக் கண்டறியப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் மருத்துவர் ருக்ஸான் பெல்லன தெரிவித்துள்ளார். தற்போது இந்த புதிய திரிபு இலங்கைக்குள் கண்டறியப்படவில்லை என்றபோதிலும் எதிர்காலத்தில் நாட்டுக்குள் பரவலாம் என்பதால் முன்னெச்சரிக்கையாக தேவையான தீர்மானங்களை எடுக்க வேண்டும். டெல்டா திரிபால் அழிந்த உயிர்களைவிட எபிசிலோன் திரிபு மூலம் ஆயிரக் கணக்கான உயிர்கள் சாவடையலாம் எனவும் மருத்துவர் பெல்லன குறிப்பிட்டுள்ளார். (து-இ)



## மஹரகம பொலிஸில் கொவிட் கொத்தணி!

கொழும்பு, ஓக.17

மஹரகம பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர்கள் நால்வர் உட்பட 12 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுடன் தொடர்பில் இருந்த 15 பேர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மஹரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அண்மையில் ஆசிரியர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த காரணத்தால் பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)



## களியாட்ட நிகழ்வாலேயே இரவு நேரத்தில் ஊரடங்கு!

கொழும்பு, ஓக. 17

இலங்கையில் இரவு நேரங்களில் களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதன் காரணமாகவே இரவில் மாத்திரம் ஊரடங்கை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் நேற்று திங்கட்கிழமை முதல் தினமும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகமொன்றுக்கு தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# 11,000 தொற்றாளர்கள் வீடுகளில் தனிமையில்


கொழும்பு, ஓக. 17

இலங்கையில் கொவிட் தொற்றாளர்கள் 11 ஆயிரம் பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று குடும்ப மருத்துவ நிபுணர்களின் சங்க தலைவர் விசேட மருத்துவர் தல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பகுதியில் சுகாதார மருத்துவ அதிகாரி மூலம் குறித்த நோயாளிகள் தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு 1390 என்ற



தொலைபேசி எண் கொடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் நோயாளிகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மருத்துவ மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும். 1390 என்ற இலக்கம் ஊடாக நோயாளிகளிடம் தொலைபேசி ஊடாக உரையாடி சுவாச பிரச்சினைகள் உள்ளதா என்பது தொடர்பில் வினவப்படும். அவ்வாறான பிரச்சினைகள் இருந்தால் நுரையீரல் தொற்று அழற்சித் தொற்றாகக் கருதப்படுகிறது. மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம)



## 19 கர்ப்பிணித் தாய்மார் 3ஆவது அலையில் சாவு!

*அனைவரும் தடுப்பூசி போடாதவர்கள்*

கொழும்பு, ஓக. 17

கொரோனா மூன்றாவது அலையில் 19 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. உயிரிழந்த அனைவரும் எவ்விதமான தடுப்பூசியையும் ஏற்றிக்கொள்ளவில்லை என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்தார்.

இதனால், நாட்டிலுள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஆலோசனைகளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் மருத்துவர் ரஞ்சித் பட்டுவன்துடாவ குறிப்பிட்டார்.

அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களும் தங்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும் எனவும், அதற்கான திகதியை அந்தந்தப் பகுதிக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகளூடாக அறிந்துகொள்ள வேண்டும் என்று ரஞ்சித் பட்டுவன்துடாவ அறிவுறுத்தியுள்ளார். தற்போது பரவும் டெல்டா வைரஸ் பிறழ்வானது, மனித உடலில் விரைவாக உட்புகக்கூடியது எனவும் டெல்டா கொரோனா பிறழ்வு தொற்றிய ஒருவரின் உடலில் மிக விரைவாக வைரஸ் அதிகளவில் உற்பத்தியாவதுடன், ஓரிரு நாள்களில் அதற்கான அறிகுறிகள் தென்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (எ-இ)

## தொற்றுக்குள்ளான தாயாரை மீண்டும் ஏற்க மறுக்கும் மகள்



கொழும்பு, ஓக. 17

கொரோனா தொற்றுக்குள்ளான மூதாட்டியொருவர், அதிலிருந்து குணமடைந்த பின்னரும் வீடு திரும்ப முடியாத நிலையில் உள்ளார். சுமார் ஒரு வருடமாக மருத்துவமனையில் அவர் தங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது மகள் ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே, மூதாட்டி போக்கிடமின்றி மருத்துவமனையில் தங்கியுள்ளார். மினுவாங்கொடவை சேர்ந்த மூதாட்டிக்கே இந்தக்கதி நேர்ந்துள்ளது. அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளானதையடுத்து கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அவர் குணமடைந்த பின்னரும், அவரது ஒரே மகள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார்.

தனது மகள் வீடு கட்ட நான்கரை இலட்சம் ரூபா பணம் தான் வழங்கியுள்ளார் என்றும், தற்போது தன்னிடம் பணமும், பொருள்களும், தங்குமிடமும் இல்லையென அவர் கண்ணீர் மல்க கூறியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிடுங்கியதெல்லாமே தேவையில்லாத ஆணிகளே!

**பி**ரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையின் சில அமைச்சுப் பொறுப்புக்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. தற்போதைய கொரோனா இடர் நிலைமையில் இந்த மாற்றங்கள் அவசியம்தானா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த அமைச்சரவை மாற்றங்கள் நடிகர் சந்தானம் நடித்த திரைப்படம் ஒன்றில் பருத்திமூடைகளை குடோனில் இருந்து மாற்றியதைப் போன்றே இருக்கின்றன. இந்த அமைச்சு மாற்றங்களில் முக்கியமானது சுகாதாரத் துறை அமைச்சு மாற்றம். இதுவரை ஊடகத் துறை அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல தற்போது சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதுவரை சுகாதார அமைச்சராக இருந்த பவித்திரா வன்னியாராச்சி போக்குவரத்துத்துறை அமைச்சராக மாற்றப்பட்டுள்ளார்.


தற்போதைய நாட்டு நிலைமைக்கும், இந்த அமைச்சரவை மாற்றத்துக்கும் எந்தவித தொடர்போ, பயனோ அறவே கிடையாது. கொரோனாத் தொற்று நிலைமையைக் கையாள்வதற்காக இந்த மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன என்றும் கொள்ளமுடியாது. தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கையாள்வதற்கு, சுகாதாரத்துறை அமைச்சராக துறைசார்ந்த ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்ற பலத்த கோரிக்கை இருக்கின்றது. தற்போதைய இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, மருத்துவர் ரமேஷ் பத்திரன போன்றவர்களின் பெயர்கள் இதற்காகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டிருகிறார். இவ்வாறு துறை சார்ந்த அனுபவ அறிவு அற்ற ஒருவர், இடர் காலத்தில் அமைச்சராக்கப்பட்டுள்ளார். எதுவாக இருந்தாலும், நாடு மூடப்படாது, தடுப்பூசி போடப்பட்டு வாழ்க்கை கடவுளிடம் ஒப்படைக்கப்படும் என்று அண்மையில் நிகழ்வொன்றில் கூறியிருந்தார் கெஹலிய ரம்புக்வெல. இவ்வாறான சிந்தனை உடையவர் இந்த இடர் காலத்தில் மக்கள் நலன் சார்ந்து செயற்படுவாரா என்பது சந்தேகமே.

போர் இடம்பெற்ற காலத்தில் ஊடகங்களுக்கு கருத்துச் சொல்வதில் பெயரெடுத்தவர் கெஹலிய ரம்புக்வெல. உண்மைத் தகவல்களை அரசுக்குச் சார்பாகத் திரித்துக் கூறுபவரில் கெஹலிய வல்லவர். தற்போதைய இடர் நிலைமையில், சுகாதார அமைச்சு இவர் வசம் சென்றிருக்கின்றது. அதனால் எதிர்காலத்தில் சுகாதார அமைச்சின் தகவல்களிலும் மக்களுக்குச் சந்தேகம் எழக்கூடும்.

''நாட்டை முடக்க வேண்டும், கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டும், நாடு மிக அபாயக் கட்டத்தில் இருக்கின்றது'' என்று சுகாதாரத் துறையினர் தினமும் காலில் விழாத குறையாகக் கேட்டு வருகின்றனர். ஆனால், அரசு அதைக் கிஞ்சித்தும் கணக்கில் எடுக்காது, தனது அரசியல் நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. இப்போதுள்ள அமைச்சரவை மாற்றமும் அவ்வாறானதே. தாம் ஏதோ நகர்வுகளைச் செய்து கொண்டிருப்பதாக மக்களுக்குக் காட்டி, மக்களைத் திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே இந்த அமைச்சரவை மாற்றத்தைக் கொள்ள முடியும்.

இந்த அரசியல் நாடகங்களை நிறுத்தி, இனியாவது கோத்தாபய ராஜபக்ச அரசு மக்கள் நலன் சார்ந்து சிந்திக்க வேண்டும். துறை சார்ந்த நிபுணத்துவம் கொண்டவர்களின் அனுபவங்களின் ஊடாக இந்தப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சரியான நேரத்தில் உரிய முடிவுகளை எடுக்க வேண்டும். அதைவிடுத்து நேற்றைய அமைச்சரவை மாற்றத்தைபோல தேவையில்லாத ஆணிகளை அரசாங்கம் பிடுங்கிக் கொண்டிருந்தால், நாடு நாசமாகும் நாள் வெகுதொலைவில் இல்லை.




# புலிகளுக்கும் தலிபான்களுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது

## தலிபான்களின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 17**

**தலிபான்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை எனத் தலிபான் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷாஹீன் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கப் படைகள் வெளியேறியதையடுத்து ஆப்கானிஸ்தானை விரைவாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் தலிபான்கள். தலைநகர் காபூலை நேற்று முன்தினம் தலிபான்கள் கைப்பற்றியதை அடுத்து அங்கு தலிபான்களால் இடைக்கால அரசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தமக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புபற்றி தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தலிபான் ஒரு சுயாதீன விடுதலைப் படை. கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானின் விடுதலைக்காகவும், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராடி வருகின்றோம். விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் தொடர்பில்லை. பௌத்த தலங்களின் பாதுகாப்பு தலிபான்களால் உறுதிப்படுத்தப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஆட்சி கவிழ்ப்பு நடத்திய முதல் நாளிலேயே (நேற்றுமுன்தினம்) ஆப்கானிஸ்தானின் பெயரை "ஆப்கானிஸ்தான் இஸ்லாமிக் அமீரகம்" என்று தலிபான்கள் மாற்றியமைத்தமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# வவுனியாவில் 50 பேருக்கு கொவிட் தொற்று உறுதி!

வவுனியா, ஓக. 17




வவுனியா மாவட்டத்தில் 50 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் ஆகியோரிடையே எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் வெளியாகின.

அதில், சூடுவெந்தபுலவு, உளுக்குளம், புளியங்குளம், டொன்பொஸ்கோ சிறுவர் இல்லம், இறம்பைக்குளம், கூமாங்குளம், நேரியகுளம், மகாறம்பைக்குளம் மற்றும் செக்கட்டிப்புலவு பகுதிகளில் தலா இருவருக்கும், சமயபுரம், நொச்சிமோட்டை, கற்குழி, வைரவப்புளியங்குளம், குடாகச்சகொடி, ஒலுமடு, பட்டானிச்சூர், ஓமந்தை இராணுவ முகாம், போகஸ்வேவ, மதவாச்சி, பூம்புகார், செட்டிகுளம் மருத்துவமனை, வேலன்குளம், செட்டிகுளம் மற்றும் ஹொரவப்பொத்தானை பகுதிகளில் தலா ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம், ஆனைவிழுந்தான் மற்றும் ஓமந்தை பகுதிகளில் தலா மூன்று பேருக்கும், தேக்கவத்தை மற்றும் சிப்பிக்குளம் பகுதிகளில் தலா நான்கு பேருக்கும் என 50 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. எழுமாற்றுச் சோதனைகளிலும் தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டதால் வவுனியாவில் கொவிட் நிலைமை தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ஜ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் ஆலயத்தை உடைத்து தங்க நகைகள் கொள்ளை

**முல்லைத்தீவு,ஓக.17**
**முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் உள்ள பாலைமரத் தடி முத்துமாரி அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு, அம்மனின் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.**



இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று மாங்குளம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது. ஆலயக் கதவை உடைத்த உட்புகுந்த கொள்ளையர்கள், அம்மனின் 6 தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-19)



## 10 ஆயிரம் மரங்கன்றுகள் நடும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக. 17
பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.
"மரம் நடுவோம் மண் வளம் காப்போம்" என்னும் மரக்கன்றுகள் நடும் திட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆதி மயிலிட்டி பெரும் பரப்பு பிள்ளையார் ஆலய வெளி வீதியில் ஆரம்பிக்கப்பட்டது என்று நிதியத்தின் தலைவர் லயன் கலாநிதி கா பீ.ஜெயவிந்தன் தெரிவித்துள்ளார். (ஐ-9)

## மன்னார் மாவட்டத்துக்கு புதிய தேர்தல் அதிகாரி



மன்னார்,ஓக.17
மன்னார் மாவட்டத்துக்கு புதிய உதவித் தேர்தல் ஆணையாளராக க. நிமலரூபன் நியமிக்கப்பட்டுள்ளார்.
மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக கடமையாற்றி வந்த ஜே.ஜெனிற்றன், வவுனியா மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக க.நிமலரூபன் நியமிக்கப்பட்டு நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். வவுனியா கூழாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இதற்கு முன்பு ஹெப்பிட்டிகொலாவ பிரதேசத்தில் உதவி பிரதேச செயலாளராகக் கடமையாற்றினார். (ஐ-213)

**நல்லூர் கந்தனுக்கு இன்று 5ஆம் திருவிழா**



## வேலால் விரட்டிடு வலிமை கொண்ட வைரஸ்களை...

நல்லூரான் என்றதுமே நாடெங்கும் கைகூப்பி வணங்குதையா
நதமின்று தவமிருக்கின்றோ முனைக்காண நடு வீதியிலே முருகா
நீயோ உனைத் தனிமைப்படுத்திக் கொண்டாய் நல்லூரிலே
நீண்ட வாழ்வருளி உன் பக்தர்களைக் காத்திடவே
கொடியேறிய உனைக்காண முடியலையே முருகா
கொரோனாவாம் டெல்டாவாம் வைரசினை விரட்டிடு உன்வேல்
கொண்டு கலைத்திடு உன் சேவல் கொடியால் விரண்டோடிட
கொத்திடு உன் மயில்கொண்டு மாண்டிடுமே கொடிய வைரஸ்
கொணர்ந்திடு இயல்பு நிலையை நின் மண்ணிலே நாம் வாழ...

தெல்லியூர் தேவி



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் ஆதரவற்று தனிமையில் வாழும் 28 முதியோர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த உதவியை செரண்டிப் சிறுவர் இல்லத்தினர் வழங்கினர். (ஐ-159)



## ஆசி கந்தராஜாவின் 'பணச்சடங்கு' நூல் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், ஓக. 17
மூத்த எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் 'பணச்சடங்கு' புனைகதைகளின் தொகுப்பு நூல், யாழ்ப்பாணத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள்' வெளியீடாக சமீபத்தில் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கு பிரபல இந்திய எழுத்தாளர் நாஞ்சில் நாடனும் இங்கை கல்விமான் பேராசிரியர் எம்.ஏ. நுஃமானும் அணிந்துரையும் முன்னுரையும் எழுதியுள்ளார்கள். பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் தனது முன்னுரையில், ஆசி கந்தராஜா இன்றைய ஈழத்து புலம்பெயர் எழுத்துலகில் மிக முக்கியமான ஆளுமைகளுள் ஒருவர். 'பணச்சடங்கு' என்னும் இவரின் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் ஒவ்வொன்றும் அவரின் முத்திரை பதித்த கதைகள். வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுபவை. பல கதைகள் மனதை அதிரவைப்பவை - என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

# சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெருந்தகை

### மதுரை ஆதீனக் குருமுதல்வரின் மறைவுக்கு நல்லை ஆதீன முதல்வரின் இரங்கல் செய்தி

யாழ்ப்பாணம், ஓக. 17
சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்த மதுரை ஆதீனத்தின் 292ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் பெற்றமையையிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் தனது இரங்கலையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துள்ளார்.
அவர் அனுப்பி வைத்துள்ள பிரார்த்தனைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
யாழ்ப்பாணம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தாய்வீடாகத் திகழ்வது மதுரை ஆதீனம் ஆகும். இந்த ஆதீனம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டி நாட்டில் தங்கி இருந்த பெருமைக்குரிய இடம் ஆகும். இத்தகைய பக்திச் சிறப்பு மிக்க மதுரை ஆதீனத்தின் 291ஆவது முதல்வரின் ஆசியுடன் 1966இல் யாழ்ப்பாணத்தில் எமது குருநாதரால் சைவ ஆதீனம் நிறுவப்பட்டது. அதன்போது ஆதீன முதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தனது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளது பெயரையே எமது குருநாதருக்குச் சூட்டி, நல்லை ஆதீனத்தை நிறுவ உத்தரவளித்தார். மதுரை ஆதீன முதல்வர் சைவத்திற்காகவும் தமிழுக்காகவும் தொண்டு செய்த பெருந்தகை.
சமய நல்லிணக்கம் குறித்து மிகவும் ஆர்வம் கொண்டிருந்ததோடு இலங்கை வாழ் சைவ மக்கள் குறித்தும் அதிக கரிசனை கொண்டு செயற்பட்டார். எம்முடன் பேரன்பு கொண்டிருந்தார். எமது நல்லை ஆதீனச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கினார்.
எமது அன்னை ஆதீனத்தின் முதல்வராக 40 ஆண்டுகள் விளங்கி இன்று தனது சிவலோக வாழ்வு பெற்ற குருமகாசந்நிதானம் அவர்களுக்கு எமது பிரார்த்தனைகளைத் தெரிவிப்பதுடன் புதிதாக 293 ஆவது குருமகா சந்நிதானமாக பொறுப்பேற்றுள்ள சுவாமி அவர்கள் தனது காலத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டாற்ற இறை திருவருள் நாடிப் பிரார்த்திக்கின்றோம் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைதிகளின் சிகிச்சைக்காக புதிய சிகிச்சை மையங்கள்!

கொழும்பு, ஓக. 17

**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் கைதிகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக புதிதாக 4 சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

தல்தென, பல்லேகல, அம்பேபுஸ்ஸ மற்றும் அங்குணகொலபெலஸ்ஸ ஆகிய பகுதிகளில் இந்த நான்கு சிகிச்சை நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் (நிர்வாகம்) சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகும் கைதிகள் இதுவரை இயக்கச்சி மற்றும் வட்டரக்க கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கே அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. ஆயினும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்படின், அதற்கு முகம் கொடுக்கும் வண்ணம் இந்தப் புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே, சிறைச்சாலைகளில் ஏற்படும் இட நெருக்கடியை குறைத்துக்கொள்வதற்காக, சிறு குற்றங்கள் தொடர்பில் சிறையிலடைக்கப்பட்ட 14 ஆயிரம் கைதிகளுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 19 ஆயிரம் பேர் வரையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)



## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஓக.17

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இன்று சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு- கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும்.

காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் புத்தளத்திலிருந்து மன்னார் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சென்னையில் இலங்கையர் ஒருவர் கைது

கொழும்பு, ஓக.17

கேரளாவில் ஹெரோயின் மற்றும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு இலங்கையர் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேரளா மாநிலம், திருவனந்தபுரத்தில் 300 கோடி இந்திய ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருள், ஏ.கே. 47 துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் கடந்த மார்ச் மாதம் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு முகாமை பிரிவு அதிகாரிகள், சென்னை வளசரவாக்கம், முரளி கிருஷ்ணா நகரில் இலங்கையர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவரது வீட்டில் அதிகாரிகள் நேற்று முன்தினம் நடத்திய சோதனையில் விடுதலைப்புலிகள் தொடர்பான புத்தகங்கள், கையடக்க தொலைபேசி மற்றும் சிம் கார்ட்கள் கைப்பற்றப்பட்டன என்று 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)

## காட்டு யானை கொலை விசேட விசாரணைக் குழு



கொழும்பு, ஓக.17

யால வலயத்தின் மூன்றாம் பிரிவில் காட்டு யானை ஒன்று கொலை செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான விசாரணைக்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தினூடாக ஒரு விசாரணையும், பொலிஸாரால் தனி விசாரணையும், ஒன்றிணைந்த விசாரணையுமாக மூன்று கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரியபண்டார தெரிவித்தார்.

வன ஜீவராசிகள் உதவி பணிப்பாளரின் தலைமையில், இந்தக் குற்றச்செயல் தொடர்பில் விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. யானை கொலை செய்யப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூற்று பரிசோதனையும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய யானையின் உடலை புதைப்பது தொடர்பான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என வன ஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த யானை சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளமை இதுவரையான விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், யானையின் தந்தமும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (எ-இ)



## அகிலவிராஜின் தந்தை இறப்பு!

கொழும்பு, ஓக. 17

முன்னாள் கல்வி அமைச்சரும், குருநாகல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அகிலவிராஜ் காரியவசத்தின் தந்தையான அல்பர்ட் காரியவசம் காலமானார்.

சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தனது 84ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

வயம்ப பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளராக செயற்பட்டு வந்த அன்னார் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் பிரபல வர்த்தகரும் ஆவார்.

அவரது இறுதிக் கிரியைகள் நாளை மாலை குளியாபிட்டிய வீரம்புவ குடும்ப மயானத்தில் இடம்பெறும் என முன்னாள் அமைச்சர் அகில விராஜ் தெரிவித்தார். (எ-இ)

## வவுனியா பல்கலைக்கழகத்துக்கு இராஜாங்க அமைச்சர் பயணம்



வவுனியா,ஓக.17

வவுனியா பல்கலைக்கழகத்துக்கு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

கடந்த முதலாம் திகதி வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டது. இந்த நிலையில் நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் வவுனியா பல்கலைக்கழகத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, பல்கலைக்கழகத்துக்கான அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்தி பணிகள் தொடர்பாகவும் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடினார்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி. மங்களேஸ்வரன் தலைமையில் பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் அமைச்சரின் இணைப்பாளர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் செயல் முட்டாள்தனம் மிக்கது

## புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

ஆசிரியர் சமூகத்தினர் ஒரு சமூகத்தை முன்மாதிரியாக வழிநடத்த வேண்டிய நிலையில் முட்டாள்தனமாக செயற்பட்டுள்ளனர் என்று புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் ந.ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறியுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருட பாதீட்டில் ஆசிரியர் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு எட்டப்படும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் எமக்குக் கூறியுள்ளார். எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் காலத்தில் ஆசிரியர் சமூகத்தினர், முட்டாள்தனமாகச் செயற்படுகின்றார்கள். அது கவலையளிக்கின்றது.

கொவிட் வைரஸ் மற்றும் டெல்டா தொற்றுகளிலிருந்து மக்களை பாதுகாத்துக்கொள்வதற்கு பல்வேறு தரப்பினரும் போராடி வருகின்றார்கள். இந்தநிலையில், ஆசிரியர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். அதனால் தொற்று அதிகரித்துள்ளது.

ஆசிரியர்கள் தமது கடமையை சரிவரச் செய்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். அரசால் வழங்கப்படும் ஊதியத்துக்கு நீங்கள் தொழில் செய்கின்றீர்களாவென்றால் இல்லை. எனினும், 90 வீத மானவர்கள் நல்லவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனால், 10 வீதமானவர்கள் ஊதியத்தை பெற்றுக்கொண்டு பாடசாலைக்குச்சென்று மாணவர்களை முன்னிலைப்படுத்துவது இல்லை. மாறாக தமது வருமானத்தை கூட்டிக்கொள்வதற்காக விசேட வகுப்புக்களை நடத்தி வருமானத்தை பெற்றுக்கொள்வதைத்தான் மேற்கொள்கின்றனர்.

பாடசாலைகளில் வகுப்பறைகளிலுள்ள 40 மாணவர்களுக்கு கல்வி கற்பித்துக் கொடுக்கும் போது ஆசிரியர்களுக்கு சுகவீனங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆனால் வெளியே 100 பேருக்கு மேல் கல்வி கற்பிக்க முடிகின்றது. அது தான் உண்மை.

**சூம் செயலியிலும் காசு பறிக்கும் ஆசிரியர்கள்**

கொரோனாத் தொற்றால் ஒரு வருடத்துக்கு மேலாக மாணவர்களின் கல்வியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 'சூம்' செயலி ஊடான வகுப்புகளுக்கு பணத்தை நேரடியாக தர முடியாவிட்டால் வங்கியில் வைப்பிலிடுமாறுகூறி, பணம் செலுத்திய பின்னர்தான் அதற்கான உட்செல்கை இரகசிய இலக்கத்தை வழங்கும் மிக கீழ்த்தரமான ஆசிரியர்களும் இந்த நாட்டில்தான் இருக்கின்றார்கள். எனவே, ஆசிரியர் சமூகம் என்பது முன்மாதிரி யான தாக இருக்க வேண்டும். முன்னர் உணர்வுபூர்வமாகச் செயற்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு ஆசிரியர்கள் - என்றார். (து-6)




# இந்தியாவின் சுதந்திரதினம் யாழ்ப்பாண தூதரகத்தில்

கொழும்பு, ஓக. 17

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளின்போது, யாழில் கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தினருக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (து-20)



# புதையல் அகழ்ந்தோர் கைது

கொழும்பு, ஓக.17

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறியும், தொல்பொருளியல் சட்டத்தை மீறியும் புதையல் அகழ்வில் ஈடுபட்ட 15 சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முன்னாள் பொலிஸ் பேச்சாளரும், மூத்த பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

வெவ்வேறு இடங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹினியாகல பொலிஸ் பிரிவில் பரகஹாகல பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 4 மோட்டார் சைக்கிள்களும், புதையல் அகழ்வுக்காக உபயோகிக்கப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஹசலக பொலிஸ் பிரிவில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேரும், மாவத்தகம பொலிஸ் பிரிவில் வேவுட யட்டிவில பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அந்தந்த பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று முன்னாள் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (எ-இ)

# ரிஷாத்தின் மைத்துனருக்கு பிணை வழங்கியது மன்று!



கொழும்பு, ஓக. 17

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிபுரிந்த ஒரு பெண்ணை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் அவரை பொலிஸார் கைதுசெய்திருந்தனர். இது தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற நிலையில், 5 லட்சம் ரூபா சரீரப் பிணை வழங்கப்பட்டது.

இதேவேளை - சந்தேகநபருக்கு நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவரது கடவுச்சீட்டையும் பறிமுதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பாகிஸ்தான் சுதந்திரதின நிகழ்வு கொழும்பில்

கொழும்பு, ஓக. 17

பாகிஸ்தான் நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வு கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் முஹம்மத் சாத் கட்டாக், தேசியக் கொடியை ஏற்றினார். பின்னர் பாகிஸ்தான் தேசியக் கீதமும் இசைக்கப்பட்டது. (து-20)

# ஒரே நாளில் 10 பேர் வீதி விபத்தில் சாவு

கொழும்பு, ஓக. 17

நாட்டில் நேற்றுமுன்தினம் வீதி விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது. உயிரிழந்தவர்களில் 9 பேர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் ஆவர். ஒருவர் முச்சக்கர வண்டியில் பயணித்தவராவார். இலங்கை பொலிஸாரின் புள்ளி விவரங்களின்படி, ஒவ்வொரு நாளும்



ஏழில் இருந்து 8பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கின்றனர். நாட்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாகனங்களின் எண்ணிக்கை 8.3 மில்லியன் மற்றும் அதில் 60 சத வீதம் மோட்டார் சைக்கிள்கள் என பட்டியலிடப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு இலங்கையின் மோட்டார் வாகன மக்கள் தொகை 7.2 மில்லியனாக இருந்தது. இந்த ஆண்டு இதுவரை வீதி விபத்துக்களால் சுமார் ஆயிரத்து 500 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றை தடுக்காவிடில் பேரழிவில் சிக்கும் நாடு!

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஓக.17

**நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்படாவிட்டால் பெரும் அழிவு ஏற்படும். நாடு பெரும் இடர் ஒன்றுக்கு முகம்கொடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் சகல கட்சித் தலைவர்கள், பிரதமர், சபாநாயகர் மற்றும் சுகாதார அமைச்சர்களுக்கு அழைப்பு விடுத்து, முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும்.**



இவ்வாறு முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர். விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயத்தை முன்வைத்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. தற்போது மரணங்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை விடவும் அதிகமாகும். உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கை அலுவலக சுயாதீன விசேட நிபுணர்களின் குழுவின் 5ஆவது கூட்டத்தில் இந்த எண்ணிக்கை 30 ஆயிரம் வரை அதிகரிக்கக் கூடும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது சுகாதாரத் தரப்பினர் முழுமையாக கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை அதிகரித்தால் சுகாதார கட்டமைப்பும் சரிவடையும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எமது அரசு உண்மையில் கடந்த மே மாதம் எடுத்த நடவடிக்கைகளை தற்போதும் எடுக்குமாயின் கட்டுப்பாடுகளை விதிக்குமாயின் உயிரிழப்பவர்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட எண்ணிக்கையைவிட 12 ஆயிரமாகக் குறைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் 18 ஆயிரம் உயிர்களை பாதுகாக்க முடியும்.

நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சித் தலைவர்களையும் அழைக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கையை முன்வைக்கின்றேன். பிரதமரும் இதில் உள்ளடங்குவார். சபாநாயகரையும் அழைக்க வேண்டும். சுகாதார அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும்.

அனைவரையும் அழைத்து அரசு முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் சகலருக்கும் தெளிவுபடுத்துங்கள். அதேபோன்று இது தொடர்பில் கலந்துரையாடுங்கள். - என்றார். (எ-இ)

# தடுப்பூசி போடும் முறை தவறானது

## கூறுகின்றார் பேராசிரியர் சந்திம ஜீவன்தர

கொழும்பு, ஓக. 17

இலங்கையில் கொவிட் தொற்றை தடுப்பதற்காக சைனோபோர்ம் தடுப்பூசி வழங்கும் முறை தவறானது என்று ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவன்தர தெரிவித்துள்ளார்.

சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்கிய பின்னர் 3 வாரங்களில் இரண்டாவது டோஸ் வழங்கப்பட வேண்டும். எனினும், இலங்கை மக்களுக்கு 4 வாரங்களின் பின்னரே இரண்டாவது டோஸ் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது மிகப்பெரிய பிரச்சினை.

3 வாரங்களில் இரண்டாவது தடுப்பூசி வழங்கினால் 4 வாரங்களில் கொவிட் தொற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கின்றது. எனினும், மேலும் ஒரு வாரம் தாமதமாக வழங்குவதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்க தாமதமடைகின்றது.

இது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். சினோபார்ம் தடுப்பூசி வழங்கும்போது இரண்டாவது தடுப்பூசியை 3 வாரங்களில் வழங்குமாறு கடந்த மே மாதம் தொடக்கம் அறிவித்தபோதிலும் சுகாதார அமைச்சு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

டெல்டா வைரஸ் நாட்டினுள் வேகமாகப் பரவும் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கு பெருமளவு தடுப்பூசி கிடைக்கும் போதிலும் மக்களுக்கு அதனை உடனடியாக வழங்காமல் இருப்பது குழப்பமான விடயமாக உள்ளது. -என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

# 24 மணிநேரத்தில் 299 தொற்றாளர்!

## மட்டக்களப்பில் இந்த நிலை

மட்டக்களப்பு, ஓக. 17

மட்டக்களப்பில் 24 மணித்தியாலத்தில் கொரோனாவால் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 299 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. அத்தோடு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 905 ஆக அதிகரித்துள்ளதுடன் இதுவரை 146 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நா. மயூரன் தெரிவித்தார்.

தொடர்ந்து ஒருவாரமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 200 தொடக்கம் 300 வரையிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

எனவே தடுப்பூசி ஏற்றிவிட்டோம் என தேவையற்ற விதத்தில் வீட்டை விட்டு வெளியேறாமல் வீட்டில் முடங்கியிருந்தால் மாத்திரமே இந்தத் தொற்றைக் கட்டுப்படுத்தலாம்.

ஆகவே மக்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் -என்றார். (ம)

# ஒரு லட்சம் பைசர் இலங்கைக்கு வந்தது!

இலங்கைக்கு மேலுமொரு தொகுதி பைசர் தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. நேற்று திங்கட்கிழமை காலை ஒரு லட்சம் பைசர் தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்தன.




நாட்டில் இதுவரையில், 2 இலட்சத்து 52 ஆயிரத்து 290 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதல் டோஸும், 31 ஆயிரத்து 605 பேருக்கு பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன. (எ-இ)

# சுற்றுலாவிகளால் கொரோனா பரவியது என்பது பொய்யாம்!

கொழும்பு, ஓக.17

உயிரியல் குமிழி முறைமை ஊடாக நாட்டுக்கு வந்துள்ள ரஷ்யா, உக்ரைன் மற்றும் கசகஸ்தான் நாட்டு சுற்றுலா பயணிகள் 99 சதவீதம் ஆரோக்கியமானவர்கள். ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் குறிப்பிட்ட கருத்து அடிப்படையற்றது. இவ்வாறு ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது ஆளும் தரப்பின் உறுப்பினராக இருந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ச அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக கருத்துரைப்பது வழமையாகவே இடம்பெறுகிறது.

உக்ரைன் சுற்றுலா பயணிகள் ஊடாக கொவிட் தாக்கம் தீவிரமடைந்தது என்று குறிப்பிட்ட அவர் அதற்கு எனது பெயரையும் தொடர்புபடுத்தியுள்ளார். கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை கட்டியெழுப்ப வேண்டிய நிலை காணப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சுகாதார வழிமுறைமைகளுக்கு அமையவே உக்ரைன் நாட்டு சுற்றுலா பயணிகள் மத்தல விமான நிலையத்துக்கு வந்தார்கள். உயிரியல் குமிழி முறைமை ஊடாக நாட்டுக்கு வருகை தந்த உக்ரைன், கசகஸ்தான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் சுற்றுலா பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனையில் 99 சதவீதமானோர் கொவிட் தொற்றுக்குள்ளாகவில்லை என்றும் அவர்கள் ஆரோக்கியமாக உள்ளனர் என்றும் உறுதிப்படுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மாலைதீவு அரசு சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த உரிய தீர்மானங்களை முன்னெடுத்துள்ளது. அதற்கு பிரதான காரணம் அனைத்து விடயங்களிலும் அரசியல் இலாபம் தேடும் தரப்பினர் அங்கு இல்லை என்பதாகும்.

சுற்றுலாப் பயணிகள் ஊடாகத் தான் கொரோனா இரண்டாம் அலை தோற்றம் பெற்றது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து விடயங்களையும் அரசியல் கோணத்தில் பார்ப்பது தவறானது. அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அடிப்படையற்றது என்பதை உறுதிப்படுத்த பகிரங்க விவாதத்தில் ஈடுபட த் தயார். - என்றுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தடையை மீறின் கைதுகள் இறுக்கமாகும்

## வாகனங்கள் கையகப்படுத்தப்படும் அஜித் ரோஹன எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 17

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸ் முன்னாள் பேச்சாளர், மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். அத்துடன், அவர்கள் பயணிக்கும் வாகனங்களும் கையகப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில இடங்களில் மாகாண எல்லைகள் வரையில் பேருந்துகளில் பயணித்து, பின்னர் அங்கிருந்து நடந்துசென்று, பின்னர் வேறு பேருந்துகள் மூலம் பிற மாகாணங்களுக்குச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இனி நடந்தால் அந்தப் போக்குவரத்துடன் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்படுவதுடன் அவர்கள் பயணித்த பேருந்தும் கையகப்படுத்தப்படும் -என்றார். (ம)

## பதிவுத் திருமணங்களுக்கு நிபந்தனையுடன் அனுமதி



கொழும்பு, ஓக.17

இன்று நள்ளிரவு முதல் திருமணங்கள் தடை செய்யப்பட்டுள்ள போதும் பதிவுகள் திருமணங்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

திருமணத் தம்பதியர், அவர்களது பெற்றோர், சாட்சிகள் மற்றும் பதிவாளர் ஆகியோரின் பங்கேற்புடன் திருமணப் பதிவுகளை வீடுகளில் நடத்தலாம், மற்றவர்கள் நிகழ்வில் பங்கேற்க முடியாது. (எ-இ)



## நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்திவைக்க கோரிக்கை

கொழும்பு, ஓக.17

தற்போதைய கொவிட்-19 நிலைமை காரணமாக இந்த வார நாடாளுமன்றக் கூட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பல ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதால் இந்த நடவடிக்கை அவசியம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார். இது பொதுமக்களுக்கு முன்னுதாரணமாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓகஸ்ட் 17ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை நான்கு நாள்கள் இந்த வாரத்துக்கான நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று செயலாளர் நாயகம் முன்னதாக அறிவித்திருந்தார். (எ-இ)

## தனிமைப்படுத்தல் உத்தரவை அலட்சியம் செய்தோர் கைது!

கொழும்பு, ஓக.17

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணிவரை நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 253 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் 54 ஆயிரத்து 612 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மேல் மாகாண எல்லைகளில் மாகாண எல்லைகளை கடக்க முற்பட்ட ஆயிரத்து 220 வாகனங்களில் பயணித்த 2 ஆயிரத்து 411 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 361 வாகனங்களில் பயணித்த 479 நபர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களில் நுழையும்போது புறப்படும் இடம் குறித்து வழங்கப்பட்ட தகவல்களுக்கு இணங்காத சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## கொவிட் தொற்றுக்கு எதிராக அம்பாந்தோட்டையில் தடுப்பூசி



கொழும்பு, ஓக. 17

அம்பாந்தோட்டையில் கொவிட் தடுப்பூசிகளை தயாரிக்கும் தொழிற்சாலையொன்று அமைக்கப்படவுள்ளது. சீனாவின் ஒரு மருந்து நிறுவனமொன்றினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் சீனாவும், இலங்கையும் தங்கள் இருதரப்பு 'தடுப்பூசி இராஜதந்திரத்தை விரிவுபடுத்தவுள்ளன. புதிய தொழிற்சாலை ஓர் உடன்படிக்கையின் கீழ் அமைக்கப்படும் என்று சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹேன தெரிவித்தார்.

இலங்கையின் அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனமான சீனாவின் சினோவாக் - பயோடெக் ஆகியவற்றுக்கு இடையில் இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப் படவுள்ளது. (ம)

# வாழ்வின் கடைசிக்காலமாக இந்தப் பகுதி அமையலாம்!

## தலைமைத்தாதி வெளியிட்ட மனதை உருக்கும் விழிப்புணர்வு பதிவு

கொழும்பு, ஓக. 17

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் அச்சுறுத்தலின் ஆபத்தை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பு தேசிய மருத்துவமனையின் தலைமைத் தாதி புஷ்பா ரம்யா டி சொய்ஸா சமூக வலைத்தளங்களில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், கொவிட் காரணமாக இன்று (நேற்று முன்தினம்) எங்களைவிட்டு பிரிந்தவர்களின் எண்ணிக்கை 160. கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மிக அதிகம்.

நாங்கள் நேசித்தவர்களில் இந்த எண்ணிக்கையை விடவும் அதிகமானோர் எங்களை விட்டு நாளை பிரியவுள்ளனர்.

இந்த நாள்களில் தினமும் எனது தனிப்பட்ட கையடக்க தொலைபேசிகளுக்கு வரும் அழைப்புகளில் 'புஷ்பா எங்கள் குடும்பத்துக்கே கொவிட். என்ன செய்வது?' என்பதே நான் கேட்கும் ஒரே விடயமாகும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நாங்கள் எவ்வளவு பாதிக்கப்படுகின்றோம்.

மருத்துவமனைகள் நிரம்பியுள்ளன. பிணவறைகள் நிரம்பியுள்ளன. எங்கள் மூத்த தலைமுறையினர் வேகமாக உயிரிழக்கின்றனர்.

இதய நோய், சர்க்கரை நோய், பக்கவாதம், சுவாச மற்றும் நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் மிகவும் அவதானமிக்க நிலைமையில் உள்ளனர்.

உடல் பருமன் மற்றும் புகைப்பிடிப்பவர்களுக்கும் அதிக ஆபத்து உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

இது தீர்மானமிக்க சந்தர்ப்பம். நீங்கள் மாறினால் மட்டுமே அதிலிருந்து விடுபட முடியும்.

- உங்கள் நோய்களுக்கு சரியான சிகிச்சை பெறுங்கள்.
- தரமான உணவை உண்ணுங்கள்.
- தேவையான அளவு தண்ணீர் பருகவும்.
- சுறுசுறுப்பான வாழ்க்கையை வாழுங்கள்.
- நன்றாக தூங்கி ஓய்வெடுங்கள்.
- மன அழுத்தத்திலிருந்து விடுபடுங்கள்.
- தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்.
- மது, புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையை தவிருங்கள்.
- அனைத்து நல்ல ஆரோக்கியப் பழக்கங்களையும் பின்பற்றுங்கள்.

நாட்டை உருவாக்கும் முன் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். இல்லை என்றால் இது நாம் கழிக்கும் நம் வாழ்வின் கடைசிக் காலப்பகுதியாக இருக்கலாம்' என அவர் பதிவிட்டுள்ளார். (து-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தான் பெண்கள் பர்தா அணிவது கட்டாயம்!

*இறுக்கமாகக் கண்காணிக்கப்படும் என தலிபான்கள் நேற்று உத்தரவு*

**காபூல், ஓக. 17**

**ஆப்கானிஸ்தானில் பெண்கள் பர்தா அணிவது மிகக் கட்டாயம் என்று அறிவித்துள்ள தலிபான்கள், இந்த உத்தரவு இறுக்கமாகக் கண்காணிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.**



ஆப்கானிஸ்தானின் ஆட்சியை நேற்றுமுன்தினம் கைப்பற்றிய தலிபான்கள் அங்கு இடைக்கால அரசமைத்துள்ளனர். இந்த நிலையிலேயே அவர்களால் இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் தலிபான்களின் ஆட்சியில் பெண்கள் சுதந்திரம் மறுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதை மெய்ப்பிக்கும் வகையில் தலிபான்களின் முதலாவது உத்தரவே அமைந்துள்ளது.

இது தொடர்பில் தலிபான்களின் செய்தித் தொடர்பாளர் சுஹைல் காதின் தெரிவிக்கையில்,

ஆட்சியாளர்களையோ பொதுமக்களையோ கொலை செய்வதோ அல்லது சொத்துக்களைச் சூறையாடுவ தையோ தலிபான்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள். பெண்கள் கல்வி கற்கத் தடையில்லை. ஆனால், பர்தா அணிவது கட்டாயமாக்கப்படும் என்றார். (ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு 01.08.1935



இறப்பு 11.08.2021

## முத்தையா கணபதிப்பிள்ளை

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கணபதிப்பிள்ளை கடந்த 11.08.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், தவநந்தினி, தவராசா, கமலராணி, மோகனதாஸ், நிமலதாஸ், சசிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவாசகன், நந்தினி, விமலாநிதி, கோமதி, சுமந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், சுவர்ணன், ரேலங்கி, மகிந்தன், சோபிகா, சோபனா, சாருகா, அனோஜன், ஆரணன், றுக்சன், தமண்ணா, கிருஷாலினி, சங்கவி, அபிராம் ஆகியோரின் பாசமிகு பேரனும், அஸ்வின் அவர்களின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை ஆஸ்பத்திரி வீதி, சங்கானையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Covid - 19** நடைமுறைக்கமைவாக மரணச் சடங்கு நடைபெறும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 225 1679

# தலிபான்களின் ஆதிக்கம் அதிர்ச்சிதரும் செய்தியே

*மலாலா அதிருப்தி*

லண்டன், ஓக. 17

தலிபான்களின் ஆதிக்கம் அதிர்ச்சியளிக்கிறது. பெண்கள், சிறுபான்மையினரை நினைத்து கவலை கொள்கிறேன் என மலாலா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. ஆப்கான் அதிபர் அஷ்ரப் கனி பதவி விலகி தஜிகிஸ்தான் சென்றுள்ளார். இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் எழுச்சி அதிருப்தி தருகின்றது என்று தெரிவித்துள்ளார் மலாலா.

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது கவலையளிக்கிறது. இதனை அதிர்ச்சியுடன் கவனிக்கிறேன். அங்குள்ள பெண்கள், சிறுபான்மையினர், மனித உரிமை செயற்பாட்டாளர்களை நினைத்து கவலை கொள்கிறேன். உள்ளூர் தலைவர்கள், பிராந்திய தலைவர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் ஆப்கனில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வழிவகை செய்ய வேண்டும். அங்கு மனிதாபிமான ரீதியிலான உதவிகளை உலக நாடுகள் செய்ய வேண்டும். அகதிகளையும், பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டும் என்று மலாலா வலியுறுத்தியுள்ளார். (ம)



# ஆப்கான் குறித்து பாப்பரசர் கவலை

உரோம், ஓக. 17

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியமைத்துள்ள நிலையில், ஆப்கானிஸ்தான் தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார் பாப்பரசர் பிரான்ஸிஸ்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

'எனது அன்புச் சகோதர, சகோதரிகளே!, ஆப்கானிஸ்தான் குறித்த ஒருமித்த அக்கறை கொள்வோரின் குழுவில் நானும் இணைகிறேன். அவர்களுக்கான அமைதியை இறைவனிடமும் என்னுடனும் இணைந்து பிரார்த்திக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் ஆயுதங்களின் சத்தம் ஓய்ந்து, உரையாடலின் மேசையில் தீர்வுகள் கிடைக்கும்' என்று தெரிவித்தார். (ம)

# ஹெய்ட்டி நிலநடுக்கம்: உயிரிழப்பு 1,297ஆக உயர்வு





போர்ட் ஆப் பிரின்ஸ், ஓக. 17

ஹெய்ட்டி நாட்டில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 297ஆக அதிகரித்தது. தலைநகர் போர்ட் ஆப் பிரின்ஸில் இருந்து 110 கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மக்கள் குடியிருப்புகளும், அடுக்குமாடிக் கட்டடங்களும் உள்ள இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் உயிரிழப்பு எண்ணிக்கை மிகையாக ஏற்பட்டது. நிலநடுக்கத்தில் சுமார் 400 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இறப்பு எண்ணிக்கை தற்போது ஆயிரத்து 297ஆக அதிகரித்துள்ளது. மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

33/04. 5 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **தர்மலிங்கம் ரஜனிகாந்தன்** ஆகிய நான் எனது பெயரை **தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆணங்களிலும் **தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன்**

## வேலையாட்கள் தேவை

பிரபல Solar நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- **வயறிங் வேலை** 35000/- இருந்து வழங்கப்படும்
- **வெல்டிங் வேலை** 40000/- இருந்து வழங்கப்படும்
- **கனரக வாகன சாரதி** 40000/- இருந்து வழங்கப்படும்

மேலதிக நேரத்திற்கு வேறாக சம்பளம் வழங்கப்படும்

25 நாட்கள் வேலை

தொடர்பு: **077 995 9363**

## காணி தேவை

முழங்காவில் மன்னார் வீதியில் வீதி ஓரமாக கடை கட்டுவதற்கு காணி தேவை.

**T.P.: 074 049 0003**

## கடை வாடகைக்கு

காங்கேசன்துறை வீதி. கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமான மாடிக்கட்டடத்தின் கீழ் அமைந்துள்ள கடையொன்றும் மேல் மாடியில் அமைந்துள்ள மூன்று கடைகளும் வாடகைக்குண்டு.

## உதவி ஐயா தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு நித்திய பூசையில் ஈடுபடுவதற்கு உதவி ஐயா தேவை மாதக் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட கடை வாடகை மற்றும் ஏனைய சேவைகளை செய்ய விரும்புபவர்கள் 21.08.2021 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலய மண்டபத்திற்கு விண்ணப்பபடிவத்துடன் நேரில் வருகை தரவும்

மேலதிக விபரங்களுக்கு: **075 761 0010**

**நிர்வாகசபை**
**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் - கொக்குவில்.**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர் - சோமசேகரம் செந்தூரன், செந்தூரன் சுலக்ஷனா முகவரி - பிரதேசசபை ஒழுங்கை . மல்லாகம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 15 சங்கானை வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான பச்சந்தை குஞ்சித்தோட்டமும் பச்சந்தை அடைப்பும் எனவும் வழங்கப்படும் பச்சந்தைவளவும் பச்சந்தையும் குஞ்சரோடையும் நிலப்பரப்பு 02 குழி 07 கொண்ட ஆதனம் ஆதனப்பதிவேட்டில் பதிவில் இல்லை .

குறித்த ஆதனத்தை செபஸ்ரியன் விக்னேஸ்வரனும் மனைவி றேனுகாவும். சிங்கராசா குகராஜா மனைவி அனுஜா ஆகியவர்கள் 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 12 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் திருமதி. காயத்திரி அகிலன் முகதாவில் 1453 இலக்கத்தில் முடிந்த அழியா நன்கொடை உறுதி மூலம் சோமசேகரம் செந்தூரன், செந்தூரன் சுலக்ஷனா என்பவர்களுக்கு கையளித்துள்ளார். இந்த ஆதனத்தின் முன்னைய உரிமையாளரான பொன்னுத்துரை சந்திரநாதன் பெண் சிவகௌரி ஆகியோர்கள் பிரசித்த நொத்தாரிஸ் மு.சபாநாதன் முகதாவில் 6260/ 22.02.2006 இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் அற்றோனித்தத்துவத்தின் மூலம் கமலநாதன் மகள் சுலக்சனா, கைலேஸ்வரன் மகள் றேனுகா மற்றும் கைலேஸ்வரன் மகள் அனுஜா ஆகியவர்களுக்கு கையளித்துள்ளார். குறித்த அற்றோனித்தத்துவம் பெற்றுக்கொள்ள முடியவில்லை என விண்ணப்பதாரரினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான பச்சந்தை குஞ்சித்தோட்டமும் பச்சந்தை அடைப்பும் எனவும் வழங்கப்படும் பச்சந்தை வளவும் பச்சந்தையும் குஞ்சரோடையும் நிலப்பரப்பு 02 குழி 07. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்கள் வரைந்த 2329/05.02.2009 இலக்க வரைபடத்தின்படி துண்டு - 01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

**கிழக்கு - மாணிக்கவாசகர் பெண் நவமணியின் ஆதனம்**

**வடக்கு - பொது ஒழுங்கை**

**மேற்கு - மனோகரன் பெண் விமலாதேவியின் ஆதனம்**

**தெற்கு - தனபாலசிங்கம் அகிலன் பெண் காயத்திரியின் ஆதனமும் கிணற்றுத் தூர்வைப்பங்கும் வழிவாய்க்காலும்**

மேற்குறித்த ஆதனத்தை சோமசேகரம் செந்தூரன், செந்தூரன் சுலக்ஷனா எனும் பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் மேற்பார்வையாளர் சேவைக்கு உள்வாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2021 - திருத்தம்

2021.08.03 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பந்தியில் 3.4 மற்றும் 7.3 பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

3.4 03/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாகீடு - 1-2016 சம்பளம் குறியீட்டில் சம்பளத்தைப் பெறுபவராக இருத்தல் வேண்டும்.

7.3 விண்ணப்பிக்கவேண்டிய இறுதித்திகதி 2021.08.24 ஆக நீடிக்கப்படுகிறது.

திரு. கிருஸ்ணானந்தம் விஜயேஸ்வரன்
செயலாளர்,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம். 2021.08.16

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.07.1943 மறைவு 14.08.2021

எமது நண்பன்
**மகேந்திரன் ஜெயகாந்தன்**
அவர்களின்
பாசமிகு தந்தையார்

**திரு.கந்தையா மகேந்திரன்**

அவர்களின் திடீர் மரணத்தினால் அல்லலுறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**நண்பர்கள்,**
**இணுவில். உமையவேள், ஜெயக்குமார், சுதன். மகிந்தன், பிரதீபன்**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.07.1943 மறைவு 14.08.2021

எமது வித்தியாலயத்தின் ஆசிரியராக கடமையாற்றிக்கொண்டிருக்கும்
**திரு.சுப்பிரமணியம் கமலதாசன்**
அவர்களின் அன்பு மாமனார்

**திரு.கந்தையா மகேந்திரன்**

14.08.2021 சனிக்கிழமை இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகம்**
**யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**திருநாவுக்கரசு அமிர்தவதி**
நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

மலர்வு 08 • 11 • 1952 உதிர்வு 18 • 07 • 2021

நாரந்தனை சரவணை கர்ணத்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபைத்தலைவர் திரு. திருநாவுக்கரசு சுந்தரலிங்கம் அவர்களது சகோதரி காலஞ்சென்ற திருநாவுக்கரசு அமிர்தவதியின் 31 ஆம் நாள் நினைவு [illegible] ஆத்மா சாந்தியடைய கர்ணத் தோட்டக் [illegible] பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

*முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...*

### கைவிடப்பட்டது...

கைவிடப்பட்டது.

நில அளவைத்திணைக்களத்தினர் குறித்த பகுதிக்கு நேற்றுக் காலை விரைந்த வேளை காணி சுவீகரிப்புக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வீதிக்கு குறுக்காக அமர்ந்து அவர்கள் கடும் எதிர்ப்பில் ஈடுபட்டனர். அந்த நேரம் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். நில அளவைத்திணைக்களத்தினர் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு திரும்பிச் சென்றனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்,

எங்களுடைய தேசத்து நிலங்களை எங்கள் மக்களுடைய அனுமதி இல்லாமல் எந்தவொரு தரப்பினருக்கும் விற்கவோ குத்தகைக்கு விடவோ அனுமதிக்க முடியாது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக மக்களுடைய ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி சில அமைப்புகள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

இந்த விடயங்களில் மக்களும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

தற்காலிகமாகக் கிடைக்கக்கூடிய சில அனுகூலங்களுக்காக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த மண்ணை சர்வதேச சக்திகளுக்கு இழக்கின்ற ஆபத்தான நிலைமையும் ஏற்படக்கூடும்- என்றார். (த-26.20)

### திணைக்களங்கள்...

தேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலக நில அளவைத் திணைக்களம் என்பனவற்றை முடக்குவோம் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இராணுவத்தினரின் தேவைக்காக காணி சுவீகரிக்க நிலஅளவைத் திணைக்களத்தினர் நேற்று எடுத்த முயற்சி மக்களின் போராட்டத்தால் தோல்வியடைந்துள்ளது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் காணி சுவீகரிப்பு சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் மட்டுமே காணிகளை சுவீகரிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-26)

### 1,157..

கள் கைதுசெய்யப்பட்டனர். சம்பவத்தில் மன்னார் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 19 . 04 . 1960



விண்ணில் 13 . 08 . 2021

## சிவராசா விஜயராணி (ராணி)

தர்மக்கேணியைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா விஜயராணி 13.08.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பாபிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், புவனலோஜினி, குணசீலன் (ஜேர்மனி), குணதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஜெயராசா, யோகராசா, காலஞ்சென்ற பேபிமலர் மற்றும் வசந்தகோகிலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் பகிரதி (ஜேர்மனி), சங்கரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், பிரிந்தன், பிரிந்தா, பிரதாபன், சோபிகா, இனியா, தர்மிகா, தர்மிகன், தர்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் அம்பலவாணர், சின்னத்துரை, காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் செல்லமணி, இந்திராணி ஆகியோரின் மைத்துனியும், சிவபாக்கியம், வசந்தநாயகி, காருணியதேவி ஆகியோரின் சகலியும், கமலலோஜினி, ரஜனிகாந், சுரேஷ்காந், தர்மலோஜினி, ஜீவலோஜினி, சர்மலோஜினி, ஜெயலட்சுமி, உதயதர்சன், சஞ்சீவ், குகராம் ஆகியோரின் சிறியதாயும், இந்துசன், லதுர்சிகன், விதுர்சன், சங்கவி ஆகியோரின் பெரியதாயும், நிதர்சனா, டிலோசனா, டிலக்சன், யதுர்சன், லதுர்சிகா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தர்மக்கேணி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தர்மக்கேணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 12 . 1928



மறைவு 15 . 08 . 2021

## திரு. சின்னையா சிவசுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

யாழ். கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் மலேசியா, கோப்பாய், நியூசிலாந்து, வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர் களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மனோன்மணி, பாலசுப்பிரமணியம் (மணியம் Radio service, கோப்பாய்), இரத்தினமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குசலகுமாரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, கொழும்பு), ரவீந்திரன் (அவுஸ்திரேலியா), மனோரஞ்சன் (ஜேர்மனி), குணசீலன் (லண்டன்), தயாபரன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினி (அவுஸ்திரேலியா), மலர்வதனி (ஜேர்மனி), சுடர்வதனி (லண்டன்), பூ (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரட்ணசிங்கம், காலஞ்சென்றவர்களான ராஜேஷ்வரி, இராஜரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஜீவினி - வித்தியதர்ஷன் (கொழும்பு), சயந்தினி - றொஷான் (கொழும்பு), தஜிரந்தன், அபிராமி (அவுஸ்திரேலியா), நர்த்தனா, கீர்த்தனா, அர்ச்சனா (ஜேர்மனி), தக்சினி, கவிலாஷ் (லண்டன்), நச், நான் இன்டர், ஆதர், வின்னர் (நியூசிலாந்து) ஆகியோரின் ஆசைப் பேரனும், தக்ஷரனின் (கொழும்பு) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு:

| | |
|---|---|
| ஜெயா | (மகள் - 009 477 614 2635) |
| ரவி | (மகன் - 0061 401 752 995) |
| ரஞ்சன் | (மகன் - 0049 1577 1315 528) |
| சீலன் | (மகன் - 0044 7891 600 422) |
| தயா | (மகன் - 0064 2104 59824) |

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி சரஸ்வதி செல்லப்பா

( ஓய்வு பெற்ற ஆசிரியை)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லப்பா நேற்று (16.08.2021) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லப்பா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் நன்னிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், சுப்பிரமணியம் பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், உருதிரசம்பவன் (ஆசிரியர், யாழ். அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை), சுதர்சினி (விரிவுரையாளர், யா/தேசிய கல்வியிற் கல்லூரி) ஆகியோரின் அன்பு தாயாரும், சாரதா (செயலாளர் - பிரதேச செயலகம் வலி தெற்கு), விக்னமோகன் (ஆசிரியர், வயாவிளான் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், கிருஷிகா, லோஷிகா, யௌவனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2021) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் விலங்கன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**மகன், மகள்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் . 23 . 04 . 1942



மறைவு . 15 . 08 . 2021

## திருமதி சித்ராதேவி சுந்தரமூர்த்தி

( ஓய்வு பெற்ற ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி கல்லடி லேனை பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்ராதேவி சுந்தரமூர்த்தி அவர்கள் கடந்த (15.08.2021) சனிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அம்மாக்குட்டி தம்பதியரின் பாசமிகு மகளும், வைரமுத்து சிதம்பரம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அமரர் சுந்தரமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி (தேவி), தவமணிதேவி (குஞ்சு), நகுலாதேவி, குணமணி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிமலன் (ஜேர்மனி), சிவபாலன் (கனடா), கமலினி (சண்டிலிப்பாய்), ஜயந்தன் (சித்த மருத்துவர்-ரத்மலானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிஷாந்தி, கவிதா, ஈசன், பஷ்யந்திகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரவீணா, கிஷானா, அஷ்வின், ஆரபி, ஆருஷன், ஆயுஷ்யன், அபிஜித், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு களுபோவில ஜயரத்ன மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிஸை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16, Auburn side,
Dehiwala.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 343 1934**
**077 104 1359**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: நிலம் பற்றிய முக்கியமான வர்த்தகம் முடியும். உறவினர்களால் நலம் உண்டாகும். கனவு நனவாகும். உழைப்பின் மூலம் நினைத்த உயரத்தை எட்டுவீர்கள்.

**இடபம்**: ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பது நல்லது. புது விஷயங்களைக் கற்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் குழப்பம் வேண்டாம்.

**மிதுனம்**: நாள் முழுவதும் சிறப்பாக அமைந்து புதிய நன்மை கைகூடும். அனுகூலமான சூழ்நிலை நிலவும். பரிசு ஒன்று காத்திருக்கிறது. வளைந்து கொடுத்து சிறப்படைவீர்கள்.

**கடகம்**: பொது நலத்துக்காக உழைத்து கைதட்டல் பெறுவீர்கள். சொத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. சந்தோஷமான நாள்.

**சிம்மம்**: வளர்ச்சி காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் அமையும். பணியாளர்களின் நிலை உயரும். சந்தோஷமும் நிம்மதியும் மீளும். விசா தொடர்பான பிரச்சினை தீர்ந்து நிம்மதி ஏற்படும்.

**கன்னி**: முன்னேற்றம் காண்பீர்கள். சண்டை சச்சரவுகள் தீரும். துணிச்சலான செயலில் ஈடுபாடு வரும். சாதனை செய்வீர்கள். சிறு உபாதை ஏற்பட்டு சிகிச்சையால் குணமடைவீர்கள்.

**துலாம்**: பிரச்சினைகள் தலைதூக்க நீங்கள் காரணமாக இருக்காதீர்கள். அலைச்சலும் செலவுகளும் சிறு களைப்பை ஏற்படுத்தும். தந்தையால் நன்மை உண்டு.

**விருச்சிகம்**: பொருளாதார நிலை ஏற்ற, இறக்கமாகவே இருக்கும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. நட்பு வட்டம் விரியும். உன்னிப்பாக செயற்பட்டு நஷ்டத்தை தவிர்ப்பீர்கள்.

**தனுசு**: அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணி ஏமாற வேண்டாம். பணியாளர்கள் யாருக்கும் ஜாமீன் கொடுக்க வேண்டாம். நட்பால் நன்மை ஏற்படும். சிறு சிறு பிரச்சினைகள் விலகும்.

**மகரம்**: பண விஷயத்தில் நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட மன அமைதி நீங்கும். ஆன்மீக ஈடுபாட்டால் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**கும்பம்**: பெண்களால் ஏற்பட்டிருந்த சங்கடங்கள் நீங்கும். துணிச்சலான நடவடிக்கையால் பிரச்சினையில் இருந்து மீளுவீர்கள்.

**மீனம்**: அலுவலக செயற்பாடுகளில் அதிக வேகம் வேண்டாம். விழிப்புணர்வு தேவை. கலைத்துறையில் ஈடுபாடு வரும். முன்னேற்றமான சூழ்நிலை உண்டு. உழைப்பால் நன்மை வரும்.



# 'அண்ணாத்த' படத்தில் இணைந்த வில்லன்

சிறுத்தை சிவா இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து வரும் திரைப்படம் 'அண்ணாத்த'. கிராம பின்னணிக் கொண்டு உருவாகி வரும் இந்த படத்தில் குஷ்பு, மீனா, நயன்தாரா, கீர்த்தி சுரேஷ், யோகிபாபு உள்ளிட்ட ஏராளமான திரை நட்சத்திரங்கள் நடித்து வருகின்றனர். இப்படத்துக்கு டி.இமான் இசையமைக்கிறார். இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்தப் படத்தில் வில்லனாக அபிமன்யு சிங் இணைந்திருப்பதாக படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். இவர் ஏற்கனவே கார்த்தி நடிப்பில் வெளியான தீரன் அதிகாரம் ஒன்று படத்தில் வில்லனாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.













அன்பிற்கினியாள்

பொறாமையை தள்ளி வையுங்கள்....
பொறுமையை தன்னோடே வையுங்கள்...

Selva Bharath@

தோல்விகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும் தைரியம் இல்லாமல் வெற்றிகளைக் கொண்டாட முடியாது.

amudu@

உலக வெப்பமயமாதலுக்கு 90's கிட்ஸ் வெளியிடும் பெருமூச்சும் ஒரு காரணம்.

கோழியின் கிறுக்கல்!!

விலக்கி வைக்க முற்படுகையில், விலகி நடக்கப் பழகுங்கள்!!



# அழகாக கோபப்படுங்கள்

எண்ணங்கள் இல்லாமல் மனித மனம் கிடையாது. ஆகவே, கோபப்படுங்கள்; ஆனால், அதற்கு ஆட்படாதீர்கள். அதாவது அழகாகக் கோபப்படுங்கள்.

கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டாம்; ஆனால், அதை வெளியேற்றும் விதங்களை, விகிதாசாரங்களை மாற்றி அமையுங்கள். அப்போதுதான் அக்கோபத்துக்கான பலன் கிடைக்கும். அதனால் நேரும் எதிர்மறை விளைவுகள் தவிர்க்கப்படும். அதற்கு சில உபயோகமான யுக்திகளையும் சொல்லித்தருகிறது உளவியல்.

கோபம் ஒற்றை உணர்வு அல்ல. ஒரு கோபம் இன்னொன்றை, இன்னொன்று மற்றொன்றை என அது ஒரு சங்கிலித் தொடர்போல உருவாகிறது. அமைதியான குளத்தில் கல்லெறிவதும்போது ஏற்படும் அலைகள் போன்றது கோபம். ஒருமுறை கல் எறிவதுடன் நிறுத்திக்கொண்டால் அதுவாக அடங்கிவிடும். திரும்பத் திரும்ப கல் எறிந்தால் அடங்கவே அடங்காது. எனவே, கோபப்படும் வகையில் ஒரு நிகழ்வு நடந்த பின்பு திரும்பவும் அதையே நினைக்காதீர்கள். நினைக்க, நினைக்க கோபம் தனக்கான நியாயத்தைக் கற்பித்துக்கொண்டு பல்கிப் பெருகும். கோபம் வருகையில் ஒரு செய்முறை. கண்ணாடி முன்பு நின்று கோபப்படுங்கள். உங்கள் முக பாவனைகளைப் பாருங்கள். ஒன்று, பயந்து பதறி விடுவீர்கள். இல்லை, அது பயங்கர நகைச்சுவையாக இருக்கும். சிரித்துவிடுவீர்கள். கோப உணர்வைக் காட்டத் துடிப்பதில் நீங்கள் காட்டும் ஒரு நிமிடத் தாமதம்கூட உங்கள் வாழ்வின் போக்கையே மாற்றக்கூடும். இதை நிரூபிக்கப் பெரியதாக அறிவியல் ஆய்வுகள் ஏதும் தேவையில்லை. அடுத்த முறை யார் மீதேனும் உங்களுக்கு கடும் கோபம் ஏற்படுகையில் உடனடியாக அவரை மனதுக்குள் திட்டுங்கள். ஒரு நிமிடம் ஆசுவாசப் படுத்திக்கொண்டு, முடிந்தால் மனவெளிப் பயணம் போய் விட்டு அவரை அழைத்துத் திட்டுங்கள். கோபம் பாதியாக்க் குறைந்திருப்பதை உணர்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமம்...

யில் 13 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தையில் கடைகள், அரைக்கும் ஆலைகள், சிற்றுண்டிச் சாலை, வங்கி என்பனவற்றில் பணிபுரிவோருக்கும் மீன் வியாபாரி, மரக்கறி வியாபாரிகள் உட்பட பலருக்கு முன்னர் தொற்று உறுதிசெய்யப்பட்ட போதும், சந்தை முடக்கப்படாது தொடர்ந்தும் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாத கொடிகாமம் நகரப் பகுதி வர்த்தகர்கள், மரக்கறி வியாபாரிகள், மீன் வியாபாரிகள், புடைவை கடை உரிமையாளர்கள், தேங்காய் வியாபாரிகள் உட்பட 49 பேருக்கு நேற்றுத் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், மரக்கறி வியாபாரிகள் 13 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் கிராமத்திலும் நடமாடும் சேவை மூலம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 10 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மொத்தமாக 23 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. எனவே தென்மராட்சி பிரதேச மக்கள் மிகவும் அவதானமாகவும், சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகவும் கடைப்பிடியுங்கள் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து வீட்டில் இருக்க வேண்டும். தேவையற்று வெளியே செல்வதை தவிர்க்க வேண்டும் என்று சுகாதார பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-159)

## விமானத்தில்..

உயிரிழந்துள்ளனர்.

விமானத்தில் ஏற மக்கள் முண்டியடிப்பதும், விமான சக்கரங்களை பற்றிக் கொண்டு பலர் பயணிப்பதும், பறக்கும் விமானத்திலிருந்து ஓரிருவர் கீழே வீழ்வதும் பதிவாகியுள்ளதோடு, பெரும் களேபரமாக விமான நிலையம் காட்சியளிக்கின்றது.

இதனையடுத்து, காபூலில் உள்ள விமான நிலையத்தின் சிவில் மற்றும் இராணுவ விமான சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று பென்ரகன் அறிவித்துள்ளது.

அமெரிக்கப் பிரஜைகளை ஏற்றிக் கொண்டு ஓடுபாதையில் நகர்ந்த இராணுவ விமானம் ஒன்றை பெரும் எண்ணிக்கையானோர் பின் தொடர்ந்து ஓடி அதனைத் தடுத்து தொங்கி ஏற முற்பட்ட காட்சிகள் வெளியாகி உள்ளன. பின்னர் வானில் எழுந்து உயரத்தில் பறந்த அந்த அமெரிக்க விமானத்தில் இருந்து மூவர் தரையை நோக்கிக் கீழே வீழ்கின்ற பேரவலக் காட்சிகள் உலகை உலுக்கியிருக்கிறது. மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள விமானங்க ளின் வெளிப்புறங்களில் ஏறிநிற்பவர்களால் விமானப்பறப்புகள் தடைப்பட்டுள்ளன.

விமானங்களைப் பறக்கவிடாமல் தடுத்த கூட்டத்தினரைக் கலைப்பதற்காக அங்குள்ள அமெரிக்கப் படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்த நேர்ந்தது. ஓடுபாதைகளில் இருந்து சனக் கூட்டத்தை விரட்டுவதற்காகப் பெரும் ஒலி எழுப்பும் 'அபாச்சி' ஹெலிகொப்ரர்கள் பயன் படுத்தப்பட்டன. அச்சம் காரணமாக வெளியேற முற்பட்ட ஆயிரக்கணக்கான ஆப்கானியர்கள் காபூல் விமான நிலையத்தை முற்றுகையிட்டுள்ளனர். அதனால் அங்கு பெரும் களேபரமான நிலைமை உருவாகி உள்ளது. வெளிநாட்டுப் பிரஜைகளோடு சேர்ந்து தாங்களும் விமானங்களில் தப்பிச் செல்லலாம் என்ற எண்ணத்துடன் உள்ளூர்வாசிகளும் விமானநிலையத்துக்குப் படையெடுத்துள்ளனர். பல நூற்றுக் கணக்கானோர் கடவுச்சீட்டு, வீஸாவதும் இன்றி விமான நிலையத்துக்கு வந்து, பயணங்களுக்காகக் காத்து நிற்கின்றனர். இதனால் அங்கு பெரும் குழப்பமான நிலை காணப்படுவதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அச்சம் காரணமாகத் தலைநகரில் இருந்து வெளியேறுவோரை தலிபான் படைகள் தடுத்துவருகின்றன எனக் கூறப்படுகிறது. நகர மக்கள் வெளியேறுவதை அனுமதிக்குமாறு தலிபான்களிடம் கோருகின்ற கூட்டு அறிக்கை ஒன்றை சுமார் 60 நாடுகள் இணைந்து வெளியிட்டிருக்கின்றன. தப்பியோடுவோரைத் தேடிப் பிடித்துக்கொல் லும் செயலை தலிபான்கள் ஆரம்பித்துள்ளனர் என்று ஐ. நா. குற்றஞ் சாட்டி உள்ளது. ஆப்கானிஸ்தானின் அதிகாரம் தலிபான்கள் வசமாகி 24 மணிநேரம் கடந்துவிட்ட நிலையில் இந்தச் செயற்பாடுகள் அரங்கேறுகின்றன. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தொடர்ந்து மௌனமாக இருந்து வருகின்றார் என்று ஊடகங்கள் சுட்டிக்காட்டி உள்ளன. (த-இ)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்

பிறப்பு:09.11.1953 இறப்பு:16.08.2021

**திரு.சின்னத்துரை பேரின்பநாயகம்**



மில்லேன் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை பேரின்பநாயகம் அவர்கள் நேற்று (16.08.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சித்திரம் த்ம்பதியரின் மகனும், அரியராணியின் அன்புக் கணவரும், சேயோன், சுகித்திரா, சுபத்திரா, மலரவன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் பிரியங்கா ஆகியோரின் பாசமிகு மாமனும், சக்திகிரீஷன், சபரீஷன், டக்ஷாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலாதேவி, இராஜேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2021) செவ்வாய்க் கிழமை இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 480 9492; 076 7611 416


## இளம் பெண் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட இளம்பெண், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சுமார் 30 நிமிடங்களின் பின்னர் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சுதுமலை மானிப்பாயைச்சேர்ந்த சுதேஸ்குமார் சுலக்சனா (வயது -19) என்பவரே உயிரிழந்தார். இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-26)

## ஒட்சிசன் எடுத்துவர இந்தியாவுக்கு விரைந்தது கப்பல்

கொழும்பு, ஓக. 17

இந்தியாவிலிருந்து ஒட்சிசனை கொண்டுவருவதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ரத்தி என்ற கப்பல் சென்னை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் ஒட்சிசன் தேவையும் அதிகரித்துள்ளதால் ஒட்சிசனை இறக்குமதி செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தது. இதற்கமைய இந்தியா மற்றும் மலேசியாவிடமிருந்து ஒட்சிசன் இறக்குமதி செய்யப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-இ)

## சங்கிலி அறுத்தவர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 17

மோட்டார் சைக்கிளை மறித்து ஏற்றிச் செல்லுமாறு கோரியவருக்கு உதவியளிக்க முற்பட்டவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவம் நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடியில் இடம்பெற்றது. சம்பவத்தையடுத்து சங்கிலியை அபகரித்துச் சென்றவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்கிக்கொண்டார். சந்தேகநபரிடமிருந்து சங்கிலியும் கைப்பற்றப்பட்டது.

வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை வழிமறித்த ஒருவர், தன்னை ஏற்றிச் செல்லுமாறு கேட்டுள்ளார்.

மோட்டார்சைக்கிளில் சென்றவர் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே அவர் அணிந்த 6 தங்கப்பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பித்து ஓடியுள்ளார்.

தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்தவர் துரத்திச் சென்ற போதும் பிடிக்கமுடியவில்லை. சம்பவம் தொடர்பில் அறிந்த பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரை கைதுசெய்தனர். அவரிடமிருந்து தங்கச் சங்கிலி கைப்பற்றப்பட்டது. வண்ணார்பண்ணை ஓடை வீதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டார். அவர் சிறையிலிருந்து அண்மையில்தான் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)


### மரண அறிவித்தல்

விழி மகிழ 13 • 03 • 1939



விழி நெகிழ 16 • 08 • 2021

வைத்திய கலாநிதி

**டாக்டர் சின்னையா வேலும்மயிலும்**

பகுதி நேர விரிவுரையாளர் கைதடி (சிலகாலம்)

யாழ். அல்வாயைப் பிறப்பிடமாகவும், பெரேரா லேன் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர்வேலும்மயிலும் அவர்கள் 16. 08. 2021 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார், காலஞ் சென்றவர்களான சின்னையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், ஓய்வுபெற்ற ஆசிரியர் வேலும்மயிலும் சின்னத் தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரி (மனோ) இன் அன்பு கணவரும், மதியழகன் (Engineer- UK), நந்தகுமார் (IT-UK), ஜெயக்குமார் (Nurse - Austria), ராஜ்குமார் (IT Consultant - UK), டாக்டர் விஜயகுமார் (SL), தேவகுமார் (Abbey Accident - UK), சுபாஷினி (UK) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ரஞ்சி மனோகரனின் அத்தானும் ஷியாமலா, சோபனா, மரியா, டிலானி மற்றும் டாக்டர் இரேஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரோஷா, லக்ஷன், நிகர்ஷன், நர்த்தனா, ஜெயா, ஜனனி, இம்மானுவேல், சரண், ஜனார்த்தனி, விதுஷா, விதுர்நன் ஆகியோரின் பாசமிகு பேரனும் பிந்தியா, லிவிந்தியா, தினேஷ், றொமேஷ், மாலதி, சங்கர் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தக்வல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வள்ளிமனை,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்
077 6147 020, 077 6294 398,
077 505 6298, 011 2361 747.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சியின் பின்....



உடற்பயிற்சியின் நோக்கம் எதுவாக இருந்தாலும் அதை முறையாகச் செய்யாதபோது, அதற்கான பலன்கள் நிச்சயம் கிடைக்காது. உடற்பயிற்சிக்கு முன்போ, உடற்பயிற்சியின்போதோ, உடற்பயிற்சிக்குப் பிறகோ செய்யவேண்டியவை பற்றி தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம். உடற்பயிற்சி செய்யும் பலரும் செய்யக் கூடிய தவறுகள் என்னென்ன தெரியுமா?

உடற்பயிற்சி முடிந்ததும் காபோவைதரேட் உணவுகளை உண்ணக்கூடாது. இவை உடல் எடையை அதிகரிக்க வழிவகுக்கும். மாறாக, அதிக புரோட்டீன் சத்துள்ள உணவுகளை உண்பதால் அவை உடலின் தசை வளர்ச்சிக்கு உதவும்.

உடற்பயிற்சி செய்து முடித்ததும் தண்ணீர் குடிக்க வேண்டியது அவசியம்.

அதே நேரத்தில் குறைந்தபட்சம் 5 நிமிட இடைவெளிக்குப் பிறகே குடிக்க வேண்டும். ஏனெனில், கடுமையான உடற்பயிற்சியின் போது அதிகமாக இருந்த குருதி அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு சாதாரண நிலைக்கு வரச் சிறிது நேரம் எடுத்துக்கொள்ளும். எனவே, உடனே தண்ணீர் குடிப்பதைத் தவிர்த்து விடுங்கள்.


உடற்பயிற்சி முடித்தவுடன் உடல் களைப்பாக இருப்பதாக உணர்ந்தால், உடனே அதிகம் சர்க்கரை சேர்க்கப்பட்ட குளிர் பானங்களையோ, சோடா போன்றவற்றையோ குடிக்கக்கூடாது. அதிகமான சர்க்கரை மீண்டும் உடலின் கலோரிகளை அதிகரித்துவிடும். எனவே, தண்ணீர் குடிப்பதே சிறந்தது.


உடற்பயிற்சி செய்து முடித்ததும் சீஸ், பதப்படுத்தப்பட்ட சிக்கன் சேர்க்கப்பட்ட பர்கர் போன்ற உணவுகளை உண்ணக் கூடாது. ஏனெனில், அவற்றில் கொழுப்பு மற்றும் உப்பு அதிகளவில் நிறைந்துள்ளன. இவை உடல் எடையை அதிகரிப்பதோடு, செரிமான மண்டலத்தையும் பாதிக்கும்.

உடற்பயிற்சிக்குப் பின் முட்டை சாப்பிடுவது நல்லதுதான். முட்டையில் புரோட்டீன் மற்றும் கோலைன் அதிகம் உள்ளது. ஆனால் முட்டையைப் பொரித்தோ வறுத்தோ சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். வேகவைத்து உண்ணலாம்.

# பப்பாளியின் 10 நன்மைகள்

1. கண் பார்வை தெளிவாகும்
2. எலும்புகள் வலுப்படும்
3. நீரிழிவு நோயாளிகளும் சாப்பிடலாம்
4. எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்
5. சருமம் பொலிவோடு இருக்கும்
6. உடல் எடை குறையும்
7. புற்றுநோயை எதிர்க்கும்
8. இதய நோய்களிடமிருந்து பாதுகாக்கும்
9. கொலஸ்ரோல் குறையும்
10. செரிமானம் சீர்படும்





# சருமத்தை இளமையாக்கும் உணவுகள்

சருமத்தை இளமையாகவும், மினுமினுப்பாகவும், பளிச் நிறத்துடனும் வைத்திருக்க சில உணவுகள் அவசியம் தேவை.

சிவப்பு நிற அப்பிளில்தான் அதிக ஆன்ட்டி ஆக்ஸிடெண்டுகள் உள்ளன. அப்பிளில் இருக்கும் விற்றமின் சி மற்றும் பாலி பீனால்கள் நம் சருமத்தை உறுதியாக வைக்கின்றன. சருமத்தில் ஐந்து மடங்கு அதிகமான ஆன்ட்டி ஆக்ஸிடெண்டுகள் இருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.





மாதுளை: இதில் பாலிபீனால்கள் அதிகம் உள்ளன. மேலும் இதில் விற்றமின் சி மற்றும் பொட்டாசியமும் அதிகம் உள்ளது. வயதாகும்போது சருமமும் லேசாக சுருக்கம் பெற்று முதுமைத்தோற்றம் தருமே; அந்த மாற்றத்தை இவை தடுக்கின்றன.



**எலுமிச்சை:**
வடுக்கள், முகப்பருக்கள், கரும்புள்ளிகளின் தோற்றத்தைத் தடுக்கும் இயற்கை மருந்தாக உதவுகிறது. இதில் விற்றமின் சி அதிகம் உள்ளது. நம் சரும செல்களில் இருக்கும் கொலாஜென்கள் என்ற புரோட்டீன்கள்தான் சருமம் சுருங்குவதைத் தடுத்து, இளமையான தோற்றத்தைத் தருகின்றன.



# நோய் தீர்க்கும் வேப்பிலை

வேம்பின் இலை மற்றும் காய் என்பன மருத்துவத்தில் சிறந்து விளங்குகின்றன. வேப்பங்கொழுந்தும் அதிமதுரப்பொடியும் சம அளவில் சேர்த்து நீர் விட்டு அரைத்துப் பட்டாணி அளவாய் மாத்திரை போல் செய்து காயவைத்து நாள் தோறும் 3 வேளை ஓரிரு மாத்திரை போல கொடுத்து வர அம்மை நோய் தணியும்.

வேப்பிலையை அரைத்துக் கட்டி வர ஆறாத ரணம், பழுத்து உடையாத கட்டி, வீக்கம் தீரும். வேப்பங்கொழுந்து 20 கிராம், ஈர்க்கு 10, 4 கடுக்காய் தோல், பிரண்டைச் சாறு விட்டரைத்து அரை அவுன்ஸ் விளக்கெண்ணெய் கலந்து கொடுக்கக் குடல் பூச்சி வெளியாகும்.

வேப்ப மரத்திலிருந்து உதிர்ந்த பூக்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு ஒரு வருடம் கழித்து இந்தப் பூவைக் கொண்டு ரசம் வைப்பார்கள். இந்த வேப்பம் பூ ரசம் பித்த சம்பந்தப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும்.

வேப்பிலைக் கசாயம் கிருமிகளைக் கொன்று காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதாகும். தினமும், காலை வேளையில் பத்து வேப்பிலைக் கொழுந்து எடுத்து ஐந்து மிளகுடன் சேர்த்து மென்று சாப்பிட்டு வந்தால் மலேரியாக் காய்ச்சல் குணமாகும். இதனை நீரிழிவு நோயாளிகள் தொடர்ந்து சாப்பிட்டு வர மாத்திரை எதுவும் இன்றிக் குணமாகும்.

வேப்பிலையை, எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துத் தலைக்குத் தேய்க்க, பித்த மயக்கம், குடிவெறி குணமாகும்.

வேப்பிலை மற்றும் மஞ்சள் சேர்த்து அரைத்துப் பூச பித்த வெடிப்பு கால் பாத எரிச்சல் குணமாகும். நகச்சுத்துக்கு பற்றிட குணமாகும். வேப்பிலையை பச்சையாகவும் வேக வைத்தும் அல்லது கசாயம் செய்தும் சாப்பிட்டு வந்தால் தீராத நோய் அனைத்தும் தீர்ந்து விடும்.

# முட்டை பஜ்ஜி

### தேவையான பொருட்கள்

முட்டை - 6
கடலை மா - 2 கோப்பை
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
சீரகம் - 1/2 தேக்கரண்டி
இஞ்சி,வெ.பூண்டு விழுது - 1 தேக்கரண்டி
மசாலாத் தூள் - 1/2 தேக்கரண்டி
உப்புத்தூள் - 1 தேக்கரண்டி
அப்பச்சோடா - 1 சிட்டிகை
எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

முட்டைகளை வேகவைத்து, தோலை உரித்துக் கொண்டு இரண்டாக நறுக்கி வைக்கவும். பிறகு ஒரு பெரிய கோப்பையில் கடலை மாவுடன் எண்ணெயை தவிர மற்ற எல்லாப் பொருட்களையும் போட்டு வேண்டிய அளவு தண்ணீரை ஊற்றி கெட்டியாக நன்கு கலக்கிவைக்கவும்.

அரைமணி நேரம் கழித்து சட்டியில் எண்ணெயை காயவைத்து முட்டைகளை ஒவ்வொன்றாக கடலைமாவுக் கலவையில் தோய்த்து மஞ்சள் கரு வெளியே வந்து விடாமல், எண்ணெயில் மெதுவாக போட்டு பஜ்ஜியாக பொரிக்கவும். தக்காளி கெட்சப்புடன் சூடாக பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாவிலும்...

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கி இணைந்து உலகளாவிய ரீதியிலான கொரோனா இறப்புகள் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளன. இதில் இலங்கை எந்த இடத்தில் உள்ளது என்பது தொடர்பான தகவலும் வெளியாகியுள்ளது.
உலகில் மிக வேகமாகக் கொரோனா உயிரிழப்புகள் சம்பவிக்கும் நாடாக இலங்கை உள்ளது. ஒரு வாரத்துக்கு முன்னர் நமது நாடு நான்காவது இடத்தில் இருந்தது. நமது நாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின் பல்கலைக்கழகம் குறிப்பிட்டுள்ளது.
இலங்கையில் மில்லியனுக்கு 5.7 வீதமானோர் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 1.9 வீதமானோர் உயிரிழக்கின்றனர். இங்கிலாந்தில் 1.33 வீதமானோரும், பிரான்ஸில் 0.76 வீதமானோரும், இந்தியாவில் 0.35 வீதமானோரும் உயிரிழக்கின்றனர். எனினும், இலங்கையில் 5.73 வீதமானோர் உயிரிழக்கின்றனர்.
இது இந்தியாவுடன் ஒப்பிடுகையில் பல மடங்கு அதிகமாகும். இலங்கையில் 15ஆம் திகதி நிலவரத்தைப் பார்க்கும் போது கொரோனா உயிரிழப்புகள் 6 ஆயிரத்தை அண்மித்துள்ளன.
நேற்று (நேற்றுமுன்தினம்) 161 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்த எண்ணிக்கைகள் தொடர்பிலும் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. சுகாதார அமைச்சு ஊடாக அரசு வெளியிடும் கொரோனா புள்ளிவிவரங்களில் குளறுபடிகள் இருக்கின்றமை தெரிய வந்துள்ளது.
குறிப்பாக கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 629 என்று அரசு கூறும்போது உண்மையான நிலவரம் 12 ஆயிரத்து 555 ஆகக் காணப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 என்று அரசு கூறும்போதும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தொற்றாளர்களின் எண்ணிக்கை 342 என்று கூறுகின்றார். திருகோணமலை மாவட்டத்தில் 71 என்று அரசு கூறும்போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் 163 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று தகவல்களை வெளியிட்டுள்ளார்"- என்றார். (த-22)

### ஒரேநாளில்...

ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா காவு எண்ணிக்கையாகும்.
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தச் சாவுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா காவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 263 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 167 பேரில் 103 ஆண்களும், 64 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.
இதில் ஓர் ஆண் 30 வயதுக்குட்பட்டவர். 22 ஆண்கள், 16 பெண்கள் என 36 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 130 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 80 ஆண்களும், 50 பெண்களும் அடங்குகின்றனர்.
இதேவேளை- மேலும் 3 ஆயிரத்து 414 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதையடுத்து நாட்டில் இதுவரையில் அடையாளம் காணப்பட்ட மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 58 ஆயிரத்து 382 ஆக எகிறியுள்ளது.
இதேவேளை- கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 325 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 12 ஆயிரத்து 57 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

### யாழில்...

மனையில் சிகிச்சை பெற்றுவந்த அச்சுவேலியைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும், பருத்தித்துறையைச் சேர்ந்த 65 வயதுடைய ஆண் ஒருவரும், பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 39 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.
அத்துடன், பருத்தித்துறை இமையாணன் பகுதியில் மயங்கி வீழ்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். அவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.
இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொவிட்19 நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 181ஆக உயர்வடைந்துள்ளது. (த-26)

### மக்கள்...

வரை குறைக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.
கொவிட்19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் செயலணி மற்றும் சுகாதார அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அறிவியல் முறைக்கு வெளியே, தடுப்பூசி செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றொரு குறிப்பில் குற்றஞ்சாட்டியுள்ளது.
நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளதோடு, தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது. இவை பற்றி மருத்துவ சங்கம், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் என்பன அரசுக்கு எச்சரித்து வருகின்ற போதும், அரசு கண்டுகொள்ளவில்லை.
இந்தநிலையில், மருத்துவ சங்கம் மேற்படி அவசர கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளது. (த-இ)

### நாடு...

பிரச்சினையிலிருந்து மீளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளவேண்டும்.
இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"நாடு தற்போது பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. ஆனால், அனைத்து தரப்பினரும் அரசை விமர்சிக்கின்றனர். அவ்வாறு விமர்சிப்பவர்களின் மத்தியில் தியாகம் பண்ணுவதற்குத் தயாரானவர்கள் எவரும் இருக்கின்றனரா என வினவ விரும்புகின்றேன்.
இதற்கான தீர்வைப் பெற்றுத்தரக்கூடியவர்களும் இவ்வாறு விமர்சிப்பவர்களின் மத்தியில் இல்லை என்றே கூற முடியும். ஆனால், இந்த நாட்டின் மக்கள், பல சந்தர்ப்பங்களில் பல தியாகங்களைச் செய்துள்ளனர்.
அதற்குச் சிறந்த உதாரணமாக சுனாமி இடரைக் கூற முடியும். இந்தநிலையில் ஓர் ஆரம்பமாக இந்த மாதத்தில் என்னுடைய சம்பளத்தில் பாதியைக் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நிதியத்துக்கு வழங்கவுள்ளேன்.
ஏனெனில், விமர்சிப்பவர்கள் மற்றும் கருத்துரைப்பவர்களாக இருப்பதன் ஊடாக எம்மால் தப்பித்துக்கொள்ள முடியாது. மக்களும் அதனையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், இவ்வாறு வழங்க முன்வரும்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனவந்தவர்கள் எனக் கூறுவர். ஆனால், நாடாளுமன்றத்தில் இருப்பினும் சொந்தமாக என்னுடைய பெயரில் வீடொன்று இல்லாத ஒரு நபராகவே நான் உள்ளேன் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்" -என்றார். (த-22)

### அமைச்சரவையில்...

இதன்படி புதிய சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டுள்ளார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான மொட்டு அரசின் அமைச்சரவை நேற்று மறுசீரமைக்கப்பட்டு, ஆறு அமைச்சர்களின் விடயதானங்கள் கைமாற்றப்பட்டுள்ளன.
இதன்படி கல்வி அமைச்சராக செயற்பட்ட பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும், வெளிவிவகார அமைச்சு பதவியை வகித்த தினேஷ் குணவர்த்தன கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச்சு பதவியை வகித்த பவித்திரா போக்குவரத்து அமைச்சராகவும், மேற்படி அமைச்சு பதவியை வகித்த காமினி லொக்குகே மின்சக்தி அமைச்சராகவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.
அதேபோல மின்சக்தி அமைச்சராக செயற்பட்ட டலஸ் அழகப்பெருமவிடம், கெஹலிய வகித்த ஊடகத்துறை அமைச்சு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கு அபிவிருத்தி இணைப்பு கண்காணிப்பு அமைச்சு பதவியும் கையளிக்கப்பட்டுள்ளது.
சுகாதார அமைச்சராக மருத்துவர் ரமேஷ் பத்திரண நியமிக்கப்படுவாரென எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில், துறைசாரா நபரொருவருக்கு தற்போதைய சூழ்நிலையில் சுகாதார அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளமை கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (த-44)

### எல்லாம்...

ரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்திரா தேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.
சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற பிரியாவிடை சந்திப்பின்போதே அமைச்சர் பவித்திரா இவ்வாறு குறிப்பிட்டார். அத்துடன், மன்னர் கால கதையொன்றையும் அவர் அங்கு எடுத்துரைத்தார். "மன்னரும், புரோகிதரும் ஒரு நாள் வேட்டைக்குச்சென்றுள்ளனர். மானொன்று வந்துள்ளது. அதை நோக்கி மன்னர் அம்பெய்துள்ளார். இலக்கு தப்பியது. இதனால் கவலையடைந்த மன்னன், நான் வைத்த குறி ஒருநாளும் தப்பாது, ஏன் இப்படி நடந்தது என புரோகிதரிடம் கேட்டார். 'எல்லாம் நன்மைக்கே' என புரோகிதர் பதிலளித்துள்ளார். சற்று தூரம் சென்ற பின்னர் மீண்டும் குறி தவறியுள்ளது. இதற்கான காரணத்தையும் மன்னர் கேட்டுள்ளார். இதுவும் நன்மைக்கே என புரோகிதர் குறிப்பிட்டுள்ளார்.
அதன்பின்னர் மன்னர் வைத்திருந்த வாளால் அவரின் விரல்கள் வெட்டுபட்டுள்ளன. ஏன் இப்படி நடக்கின்றது என மன்னர் கேட்டபோது, இதுவும் நன்மைக்குதான் என புரோகிதர் கூறியுள்ளார்.
இதனால் கடுப்பான மன்னர், புரோகிதரை குழிக்குள் தள்ளிவிட்டு, வேறு திசையில் பயணித்தார். அங்கு அரக்கர் கூட்டமொன்று இருந்துள்ளது. பலி பூஜை நடத்துவதற்கு மனிதனொருவரை அரக்கர்கள் தேடிக்கொண்டிருந்தனர். மன்னரை பிடித்து நீராட வைத்து, பூஜைக்கு கொண்டுசென்றனர். பூரண மனிதரொருவரையே பலி கொடுக்க வேண்டும். ஆனால் மன்னரின் விரல்கள் வெட்டப்பட்டுள்ளன. இதனால் அவர் விடுவிக்கப்பட்டார்.
இதனையடுத்து அட, புரோகிதர் சொன்னது உண்மைதான் என யோசித்த மன்னர், அவரை குழிக்குள் போட்டது தவறு என மனம் வருந்தினார். விரல்கள் வெட்டுப்பட்டதால்தானே நான் தப்பித்தேன் என்பதையும் உணர்ந்தார். புரோகிதரிடம் மன்னிப்பும் கோரினார்.
அப்போது, மன்னரே நீங்கள் என்னை குழிக்குள் தள்ளியதும் நன்மைக்கே. ஏனெனில், உங்களுடன் நான் வந்திருந்தால் என்னை பலி கொடுத்திருப்பார்கள் என புரோகிதர் குறிப்பிட்டுள்ளார். எனவே, என்னை குழிக்குள் தள்ளியதற்கு நன்றி.
அந்தவகையில் எல்லாம் நன்மைக்குத்தான் என நினைத்து மனதை தேற்றிக்கொள்வோம். சுகாதார அமைச்சில் மகிழ்ச்சியுடன்தான் வேலைசெய்தேன். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்கினர். எனவே, புதிய அமைச்சருக்கும் அதே போல ஒத்துழைப்பு வழங்கவும்.- என்றார். (த-44)

### முழங்கால்..

சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பழனிநாதன் பிரபாகரன் (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.
நாதஸ்ரம் வாசிக்கும் இவர், கடந்த 6ஆம் திகதி பனங்காமம் நோக்கி முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்தபோது, அவரது முழங்கால் முச்சக்கரவண்டிக்கு வெளியே நீண்டிருந்ததால், அதன் பின்புறமாகச் சென்றுகொண்டிருந்த உழவு இயந்திரம் இடித்து காயமடைந்துள்ளார்.
சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.
மருத்துவமனையின் திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தலிபான்களுடைய ஆட்சி

# ஆப்கான் கிரிக்கெட் என்னவாகும்?



**காபூல், ஓக. 17**

**ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் வசம் சென்றுவிட்ட நிலையில், அந்நாட்டின் கிரிக்கெட் அணி நிலைமை, எதிர்காலம் என்னவாகும் என்ற கேள்வியும், எதிர்பார்ப்பும் ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.**

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறத் தொடங்கியபின், தலிபான்கள் பெரும்பாலான மாகாணங்களைத் தங்கள் வசம் கொண்டு வந்துவிட்டனர். காபூல் நகருக்குள் தலிபான்கள் நுழைந்தவுடன் அதிபர் அஷ்ரப் கானி, அங்கிருந்து தஜிகிஸ்தான் சென்றுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்களின் ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதமும், பழமைவாத சிந்தனைகளும் நிரம்பிய தலிபான்கள் கிரிக்கெட் போன்ற விளையாட்டையும், பெண்களுக்கான உரிமைகளையும் இனிமேல் வழங்குவார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தலிபான்களின் பிடியில் இதற்கு முன் ஆப்கானிஸ்தான் இருந்தபோது, பெண்களுக்கான உரிமை முற்றிலும் மறுக்கப்பட்டு, குழந்தை பெறுத்தரும் இயந்திரங்களாக மட்டுமே நடத்தப்பட்டார்கள். பல விளையாட்டுகள் தடை செய்யப்பட்டிருந்தன. ஆனால், கிரிக்கெட் விளையாட்டை தலிபான்களும் அனுமதித்திருந்தார்கள் என்பதுதான் உண்மை. தலிபான்கள் கட்டுப்பாட்டில் ஆப்கான் இருந்தபோதே கடந்த 1995ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அமைக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் அகதிகள் தாய்நாட்டுக்குத் திரும்பியபோதிலும் கிரிக்கெட் விளையாடினர். தொடக்கத்தில் கிரிக்கெட் விளையாடவும் தடை விதித்த தலிபான் தீவிரவாதிகள், காலப்போக்கில் கிரிக்கெட்டுக்கு மட்டும் விலக்கு அளித்து மற்ற விளையாட்டுகளுக்குத் தடையை நீட்டித்தனர்.

2000ஆம் ஆண்டில் தலிபான்கள் ஆட்சியில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரே விளையாட்டு கிரிக்கெட்டாக மட்டும்தான் இருந்தது.

இதைத் தொடர்ந்து ஐ.சி.சி. சார்பில் ஆப்கானிஸ்தான் கடந்த 2001ஆம் ஆண்டு உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

2001ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தானுடன் ஆப்கானிஸ்தான் நாடு கிரிக்கெட் விளையாடத் தொடங்கியது. ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இருந்த கிரிக்கெட் ஆர்வத்தைப் பார்த்த தலிபான்கள், பாகிஸ்தான் அரசிடம் பேசி, ஐ.சி.சி. உறுப்பினராக உதவுமாறு கோரினார்கள். அதன்பின் 2003, 2004, ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு பயணம் செய்து ஆப்கானிஸ்தான் அணி விளையாடியது.

தலிபான்கள் கைகளில் ஆப்கானிஸ்தான் ஆட்சி சென்றாலும் கிரிக்கெட் மீது எப்போதும் கரிசனமாகவே தலிபான்கள் இருந்துள்ளார்கள். ஆதலால், ஆப்கானிஸ்தான் கருகிவிடாது என்று நம்பலாம் அணியில் எதிர்காலம் கருகிவிடாது என்று நம்பலாம்.

அதற்குச் சிறிய சம்பவத்தை உதாரணமாகவும் குறிப்பிடலாம். கடந்த 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கு ஆப்கானிஸ்தான் அணி முதல் முறையாகத் தகுதி பெற்றுவிட்டது. இந்தச் செய்தியைக் கேட்டதும் தலிபான்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

இதுகுறித்து அப்போதைய ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் நூர் முகமது கூறுகையில்,

'ஆப்கானிஸ்தான் வரலாற்றிலேயே முதல் முறையாக தலிபான்களும், நாங்களும் சுட்டுக்கொண்டோம், ஒருவர் மீது ஒருவர் அல்ல. வானத்தை நோக்கி சுட்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டோம். ஆப்கானிஸ்தான் அணி உலகக் கோப்பைக்குத் தகுதி பெற்றதைக் கொண்டாடினோம்' என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

**மணமகன் தேவை**

கனடா (PR) உள்ள 1994 இந்து சூரியன் செவ்வாய் உள்ள மணமகளுக்கு படித்த அழகான மணமகன் தேவை.

**T.P.: 077 408 8241**

## ரி-20 உலகக்கிண்ணத்தில் ஆப்கான் விளையாடும்!

**காபூல், ஓக. 17**

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை பிடித்துள்ளனர். இதனால் அங்கு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் ஆப்கானிஸ்தான் அணியால் ரி-20 உலகக்கோப்பை தொடருக்கு தயாராக முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஆனால், ரி-20 உலகக்கோப்பையில் நிச்சயமாக பங்கேற்போம் என, ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

"நாங்கள் ரி-20 உலகக்கோப்பையில் விளையாடுவோம். அதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் சில நாட்களில் உலகக்கோப்பைக்கான அணியில் விளையாட இருக்கும் வீரர்கள் காபூல் நகருக்கு பயிற்சி மேற்கொள்ள வருவார்கள் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்தது. (ம)

## கோலியின் விளையாட்டு உண்மையில் படுமோசம்

### கவாஸ்கர் ஆதங்கம்

**லண்டன், ஓக. 17**

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் கோலியின் ஆட்டம் உண்மையில் படுமோசமாகவே இருக்கின்றது என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கவாஸ்கர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்று வரும் தொடரில் விராட் கோலியின் செயற்பாடு அதிருப்தி தருகின்றது. குறிப்பாக லோட்ஸ் டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் சாம் கரன் பந்துவீச்சில் கோலி ஆட்டமிழந்த விதம் ஏற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

கோலி செய்த தவறை மீண்டும் செய்யும் சராசரி வீரராக மாறிவருகின்றாரோ என்ற எண்ணம் மேலிடுகின்றது. எனவே அவர் பொறுப்புணர்ந்து விளையாட வேண்டும்- என்றார். (ம)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

பிறப்பு 08 • 01 • 1948



இறப்பு 18 • 07 • 2021

கடந்த 18.07.2021 அன்று இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சீனிவாசகம் செல்வரட்னம்**

**அவர்களின் நினைவாக**

அப்பா என்றழைத்த எங்கள் தெய்வம்
அறிவுதனை ஊட்டி
அன்புதனைக் காட்டி
அன்னையுமாய் தந்தையுமாய்
அயராது எங்கள் உயர்வுக்காய்
அரும்பாடுபட்டு
அல்லல்படும் வேளையிலும்
ஆறுதலாயிருந்து - எம்மையெல்லாம்

அரவணைத்து வந்தீரே - அப்பா!
இல் வாழ்வு சிறக்க வைத்து - இன்று
காலனவன் அழைத்தான் என்று - எங்களுக்கு
கதை பல சொல்லிவிட்டு - எங்களை
கலங்கவைத்துச் சென்றதேனோ
நாட்கள் தான் நகர்ந்தாலும் - அப்பா
நாங்கள் உம்மை மறப்போமா!

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும், நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும், முகநூலின் ஊடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உறவுகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"கோணேச மஹால்"
வேம்போலை,
இணுவில் கிழக்கு.

"நினைவெல்லாம் நீர் இருக்க
நித்தம் உமைத் தேடுகின்றோம்"
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.